விலை ரூபா: 7.00

Registered as a Newspaper in Srilanka

# வலம்புரி
Valampurii

பக்கங்கள்:- பன்னிரண்டு

சங்கு 05 | வள்ளுவர் ஆண்டு 2035 | கார்த்திகை 26 | சனிக்கிழமை | (11.12.2004) | தொலைபேசி 2223378, 2227644 | ஒலி 358

புதுப் பொலிவுடன் திருநெல்வேலியில்
WESTERN UNION
பணப் பரிமாற்றம்
* விரைவானது * பாதுகாப்பானது * நம்பகமானது
இப்பொழுது உலகின் எப்பாகத்திலிருந்தும் மிக துரிதமாக பணத்தினை பெற்றுக்கொள்வதற்கு
♦பணம் பெறுவதற்கு வங்கிக்குப் போகத் தேவையில்லை
♦வங்கிக் கணக்கு அவசியமில்லை
♦நீடிக்கப்பட்ட சேவை நேரம்
♦365 நாள் சேவை
♦10 (MTCN) இலக்கங்களைப் பெற்றவுடன் எம்மை நாடவும்
THIRUMURUGAN COM NET
T.P. 021 2227310
021 2227555
021 2227560
FAX 021 2227310
E-mail: thirumurugan@eudoramail.com
46, ஆடியபாதம் வீதி, (ப.நோ.கூ.ச. முன்பாக) திருநெல்வேலி யாழ்ப்பாணம்

## சமாதான முயற்சிகள் குறித்து ஆராய நோர்வேயின் சமாதானத் தூதுவர் சொல்ஹெய்ம் இலங்கை வருகிறார்

### எதிர்வரும் 15 ஆம் திகதி வன்னி செல்வார்

(நமது நிருபர்)

**அரசுக்கும், விடுதலைப் புலிகளுக்கும் இடையிலான நேரடி பேச்சுவார்த்தையை ஆரம்பிப்பதற்கான சாத்தியக்கூறுகள் குறித்து ஆராய்வதற்காக நோர்வேயின் விசேட சமாதான தூதுவர் எரிக் சொல்ஹெய்ம் எதிர்வரும் திங்கட்கிழமை இலங்கை வரவுள்ளார்.**

இலங்கை வரும் சொல்ஹெய்ம் விடுதலைப் புலிகளின் தலைவர் வேலுப்பிள்ளை பிரபாகரனின் மாவீரர்தின உரையில் விடுக்கப்பட்ட கோரிக்கைகள் தொடர்பாக ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்க, எதிர்க்கட்சித் தலைவர் ரணில் விக்கிரமசிங்க ஆகியோரைச் சந்திக்கவுள்ளார்.

அதன் பின்னர் எதிர்வரும் புதன்கிழமை கிளிநொச்சிக்குச் சென்று விடுதலைப் புலிகளின் அரசியல்துறைப் பொறுப்பாளரை சந்தித்துப் பேசவுள்ளார்.

இச்சந்திப்பின்போது அரசின் நிலைப்பாடு தெரிவிக்கப்படும் என எதிர்பார்க்கப்படுகின்றது. (ச-04)

## மாநகரசபை செயற்பாடுகள் நேற்று ஸ்தம்பிதமடைந்தன

(யாழ்ப்பாணம்)

யாழ். மாநகர சபையின் சுத்திகரிப்பாளர்கள் நேற்று மறியல் போராட்டத்தில் ஈடுபட்டதால் மாநகர சபை நடவடிக்கைகள் முற்றாகச் செயலிழந்தன. மாநகர சபையின் நுழைவாயிலை கயிற்றால் கட்டி, சுலோகங்களைத் தாங்கியவாறு அவர்கள் மறியலில் ஈடுபட்டனர்.

இதனால் ஏனைய ஊழியர்கள் கடமைக்கு செல்லமுடியாமல் வீடுகளிற்கு திரும்பிச் சென்றனர். தமது கோரிக்கைகளுக்கு உரிய பதிலை தரும்வரை போராட்டம் தொடரும் என மறியலில் ஈடுபட்டோர் தெரிவித்தனர்.

'மாநகர ஆணையாளர் வரும்வரை போராட்டம் தொடரும்' 'சுகாதார வைத்திய அதிகாரியை இடைநிறுத்தம் செய்' 'தாபனப்பகுதி நிர்வாக உத்தியோகத்தரை உடனடியாக இடைநிறுத்து' போன்ற பதாகைகளை போராட்டத்தில் ஈடுபட்டோர் வைத்திருந்தனர்.

இதேவேளை மாநகர சபை சுத்திகரிப

(12 ஆம் பக்கம் பார்க்க)

## எமது தேசத்தைக் கட்டியெழுப்பும் பணியை மனித உரிமைகள் செயலகம் கொண்டுள்ளது

### சு.ப. தமிழ்ச்செல்வன் தெரிவிப்பு

(கிளிநொச்சி)

மனித சமத்துவம், விழுமியம் போன்ற உயர்ந்த சிந்தனையுடன் தமிழீழத் தேசியத்தலைவரின் எண்ணத்தை நிறைவேற்றும் வகையில் வடக்கு கிழக்கு மனித உரிமைகள் செயலகம் செயலாற்றி வருகின்றது என விடுதலைப்புலிகளின் அரசியல்துறைப் பொறுப்பாளர் சு.ப. தமிழ்ச்செல்வன் தெரிவித்துள்ளார்.

வடக்கு கிழக்கு மனித உரிமைகள் செயலகத்தில் அதன் இயக்குநர் கருணாரத்தினம் அடிகளார் தலைமையில் நேற்று மனித உரிமைகள் தினம் கொண்டாடப்பட்டது.

அதில் கலந்துகொண்டு உரையாற்றும்போதே தமிழ்ச்செல்வன் இதனைத் தெரிவித்துள்ளார்.

மனித உரிமைகள் தினத்தை முன்னெடுக்கும் அளவிற்கு விடுதலைப்புலிகள் உயர்ந்துள்ளனர். ஒடுக்குமுறை மனித உரிமை மீறல் என்பன உச்சக்கட்டத்தில் இருக்கும் வேளையில் அதனை எதிர்த்து நாம் நகர்வது எமக்கு மன நிறைவைத் தருகின்றது என்றார்.

வடக்கு கிழக்கு மனித உரி

(12 ஆம் பக்கம் பார்க்க)

## பாராளுமன்றத்தில் நேற்றும் எம்.பிக்கள் ஆர்ப்பாட்டம்

(கொழும்பு)

பாராளுமன்றத்தில் நேற்று நண்பகல் ஏற்பட்ட அமளி துமளி காரணமாக சபை நடவடிக்கைகளை 10 நிமிடங்களுக்கு குழுக்களின்தலைவர் எம். சச்சிதானந்தன் ஒத்திவைத்தார்.

ஐக்கிய தேசியக் கட்சியின் பாராளுமன்ற உறுப்பினர் பந்துல குணவர்த்தன உரையாற்றிக் கொண்டிருந்தபோது அவரது உரையை நிறைவு செய்வதற்கு குழுக்களின் பிரதித் தலைவர் வேண்டுகோள் விடுத்தபோதே இவ்வேளை அமளி ஏற்பட்டது.

பாராளுமன்ற உறுப்பினர் பந்துல குணவர்த்தனவிற்கு 30 நிமிடம் உரையாற்ற அவகாசம் வழங்கப்பட்ட போதும் அவர் மேலும் 10 நிமிடங்கள் உரையாற்றினார்.

இதனை அடுத்து பிரதிக் குழுக்களின் தலைவர் பாராளுமன்ற உறுப்பினர் பந்துல குணவர்த்தனவின் உரை முடிவடைந்ததாகவும் அடுத்ததாக உரையாற்ற இருக்கும் விமல் வீரவன்சவை உரை நிகழ்த்துமாறு அழைத்தார்.

(12 ஆம் பக்கம் பார்க்க)

## தமிழ்க் கூட்டமைப்பு எம்.பிக்களுடன் முஸ்லிம் பிரதிநிதிகள் நேற்று சந்திப்பு

### வடக்கு முஸ்லிம்களின் நிலை குறித்து ஆராய்வு

(புத்தளம்)

தமிழ்க் கூட்டமைப்பின் பாராளுமன்ற உறுப்பினர்களுக்கும் வடபகுதி முஸ்லிம் பிரதிநிதிகளிற்கும் இடையில் நேற்று பாராளுமன்ற கட்டடத்தில் முக்கிய சந்திப்பு ஒன்று இடம்பெற்றுள்ளது.


சுமார் ஒரு மணித்தியாலம் வரை இடம் பெற்ற இச் சந்திப்பின்போது சில தீர்மானங்கள் எடுக்கப்பட்டுள்ளது. வடக்கிலிருந்து இடம்பெயர்ந்த முஸ்லிம்களை தமது சொந்த இடங்களில் மீளக்குடியமர்த்தல், [...]ள் குடியமர்வை துரிதப்படுத்துவதற்கு வடபகுதியில் உள்ள மாவட்ட செயலகங்களில் விசேட பிரிவொன்றை ஏற்படுத்த நடவடிக்கை எடுக்க தமிழ், முஸ்லிம் சமூகங்களுக்கு இடையில் இனவுறவை ஏற்படுத்தும் வகையில் புத்திஜீவிகளுடனான சந்திப்புகளைத் துரிதப்படுத்தல், வடக்கு புத்திஜீவிகள், விடுதலைப் புலிகளின் அரசியல்துறையினருடன் சந்திப்பை ஏற்படுத்த நடவடிக்கை எடுத்தல் போன்ற தீர்மானங்கள் எடுக்கப்பட்டன.

இதேவேளை இழக்கப்பட்ட சொத்துக்களுக்கான நஷ்ட ஈட்டை பெற்றுக்கொள்வது குறித்து இரு தரப்புக்குமிடையில்

(12 ஆம் பக்கம் பார்க்க)

## மூதறிஞர் "சொக்கன்" காலமானார்

(யாழ்ப்பாணம்)



சொக்கன் என்று அழைக்கப்படும் ஈழத்தின் மூத்த தமிழ் அறிஞர் கலாநிதி க. சொக்கலிங்கம் நேற்று பிற்பகல் ஒரு மணியளவில் காலமானார். அவருக்கு வயது74.

1930 ஆம் ஆண்டு ஆவரங்கால் கிராமத்தில் பிறந்த இவர், தனது ஆரம்பக் கல்வியை யாழ்ப்பாணம் இந்து ஆரம்பப் பாடசாலையிலும் யாழ். வண்ணை நாவலர் வித்தியாலயத்திலும் கற்றார்.

உயர் கல்வியை கனகரத்தினம் மகா வித்தியாலயத்தில் மேற்கொண்டார். சிலாபம், முல்லைத்தீவு, யாழ்ப்பாணம் ஆகிய இடங்களில் உள்ள பாடசாலைகளில் ஆசிரியராக பணிபுரிந்தார். அவர் அதிபராக பணியாற்றிய பின்னர் ஆசிரிய கலாசாலையில் தமிழ் விரிவுரையாளராக கடமையாற்றினார்.

முதுகலைமாணிப் பட்டதாரியான சொக்கன் கல்வித்துறையில் வித்துவான்பட்டம்

(12 ஆம் பக்கம் பார்க்க)



அஞ்சலிக்காக வைக்கப்பட்டிருக்கும் மூதறிஞர் சொக்கனின் பூதவுடலை படத்தில் காணலாம். படம்: நோயல், சர்வர்.

## வெலிக்கடைச் சிறைச்சாலைக்குச் சென்று எஸ்.பி. திஸநாயக்கவை ரணில் பார்வையிட்டார்

(கொழும்பு)

எதிர்க்கட்சித் தலைவரும் ஐக்கிய தேசியக்கட்சித் தலைவருமான ரணில் விக்கிரமசிங்க நேற்று வெலிக்கடைச் சிறைக்குச் சென்று எஸ்.பி.திஸநாயக்கவைப் பார்வையிட்டார்.

சிறை அதிகாரிகளின் அனுமதியைப் பெற்று நண்பகல் 12 மணியளவில் வெலிக்கடைச் சிறைக்குச் சென்ற ரணில், அங்கு தனிக் கூண்டில் இருந்த எஸ்.பி.திஸநாயக்கவைச் சந்தித்துப்பேசினார்.

இதேவேளை, நேற்று முன்தினம் வெலிக்கடைச் சிறைக்குச் சென்ற எஸ்.பி.திஸநாயக்கவின் மனைவி தாமர திஸநாயக்க மற்றும் மகன்மாரை சிறைச்சாலைக்குள் செல்ல சிறைச்சாலை அதிகாரிகள் விடவில்லை. வாசலில் வைத்துத்திருப்பி அனுப்பிவிட்டார்கள்.

இவர்கள் வந்திருப்பதை தொலைபேசியூடாக சம்பந்தப்பட்ட அதிகாரிகளுக்கு தெரிவித்து அவர்களின் உத்தரவைப் பெற்றுக் கொண்ட சிறைச்சாலை அதிகாரிகள், எஸ்.பி.திஸநாயக்காவின் மனைவி

(12 ஆம் பக்கம் பார்க்க)

# UNIVERSITY ADMISSIONS – ACADEMIC YEAR 2004/2005

## JAFFNA DISTRICT

| | |
|---|---|
| Medicine | 1.9372 |
| Dental Surgery | 1.9210 |
| Veterinary Science | 1.9056 |
| Agriculture | 1.3716 |
| Food & Nutrition | 1.6240 |
| Biological Science | 1.1576 |
| Applied Science (Bio. Sc.) | 1.1011 |
| Engineering (MPR) | 1.8648 |
| Engineering (EM) | 1.8206 |
| Engineering (TM ) | 1.8511 |
| Quantity Surveying | 1.7962 |
| Computer Science | 1.2934 |
| Surveying Science | 1.6724 |
| Applied Science (Phy. Sc.) | 1.2733 |
| Management Studies | 1.5302 |
| Estate Management & Valuation | 1.4298 |
| Commerce | 1.4769 |
| Arts* | 1.3695 |
| Arts (SP)* - Mass Media | NQC |
| Arts (SP)* - Performing Arts | NQC |
| Arts (SAB)* - A | 1.3543 |
| Arts (SAB)* - B | NQC |
| Management Studies (SV) - A | 1.4499 |
| Management Studies (SV) - B | 1.4342 |
| Architecture | 0.7048 |
| Design | NQC |
| Law | 1.6930 |
| Information Technology | 1.8310 |
| Management & Information Technology | 1.1776 |
| Public Management (Administration) | 1.4438 |
| Town & Country Planning | 1.6925 |
| Peace & Conflict Resolution* | NQC |
| Ayurvedic Medicine & Surgery* | NQC |
| Unani Medicine & Surgery* | NQC |
| Textile & Clothing Technology | NQC |
| Food Science & Technology | 1.8107 |
| Siddha Medicine* | 0.8420 |
| Nursing | 1.7526 |
| Information & Communication Technology | 1.7494 |

## TRINCOMALEE DISTRICT

| | |
|---|---|
| Medicine | 1.5007 |
| Dental Surgery | 1.4795 |
| Veterinary Science | 1.4147 |
| Agriculture | 1.0674 |
| Food & Nutrition | 1.3905 |
| Biological Science | 0.8497 |
| Applied Science (Bio. Sc.) | 0.9799 |
| Engineering (MPR) | 1.5307 |
| Engineering (EM) | 1.4921 |
| Engineering (TM ) | 1.5292 |
| Quantity Surveying | 1.4504 |
| Computer Science | 1.3292 |
| Physical Science | 0.6453 |
| Surveying Science | 1.3271 |
| Applied Science (Phy. Sc.) | 0.5858 |
| Management Studies | 1.4507 |
| Estate Management & Valuation | 1.6218 |
| Commerce | 1.4263 |
| Arts* | 1.2977 |
| Arts (SP)* - Mass Media | NQC |
| Arts (SP)* - Performing Arts | NQC |
| Arts (SAB)* - A | NQC |
| Arts (SAB)* - B | NQC |
| Management Studies (SV) - A | 1.3878 |
| Management Studies (SV) - B | 1.3629 |
| Architecture | NQC |
| Design | NQC |
| Law | 1.6247 |
| Information Technology | 1.3839 |
| Management & Information Technology | 1.2140 |
| Public Management (Administration) | 1.6974 |
| Town & Country Planning | 1.4614 |
| Peace & Conflict Resolution* | 1.5949 |
| Ayurvedic Medicine & Surgery* | NQC |
| Unani Medicine & Surgery* | 1.1074 |
| Textile & Clothing Technology | NQC |
| Food Science & Technology | 1.2307 |
| Siddha Medicine* | NQC |
| Nursing | 1.1306 |
| Information & Communication Technology | 1.2807 |

## MANNAR DISTRICT

| | |
|---|---|
| Medicine | 1.4298 |
| Dental Surgery | 1.1876 |
| Veterinary Science | 0.9043 |
| Agriculture | 0.7645 |
| Food & Nutrition | 0.8581 |
| Biological Science | 0.5759 |
| Applied Science (Bio. Sc.) | 0.5505 |
| Engineering (MPR) | 1.0840 |
| Engineering (EM) | 1.0590 |
| Engineering (TM ) | 0.9583 |
| Quantity Surveying | 0.6558 |
| Computer Science | 0.9370 |
| Physical Science | 0.1878 |
| Surveying Science | 0.6737 |
| Applied Science (Phy. Sc.) | 0.4232 |
| Management Studies | 1.4108 |
| Estate Management & Valuation | 1.1521 |
| Commerce | 1.2879 |
| Arts* | 1.1921 |
| Arts (SP)* - Mass Media | NQC |
| Arts (SP)* - Performing Arts | NQC |
| Arts (SAB)* - A | NQC |
| Arts (SAB)* - B | NQC |
| Management Studies (SV) - A | 1.2577 |
| Management Studies (SV) - B | 1.2493 |
| Architecture | NQC |
| Design | NQC |
| Law | 1.4365 |
| Information Technology | NQC |
| Management & Information Technology | NQC |
| Public Management (Administration) | 1.6359 |
| Town & Country Planning | 0.8700 |
| Peace & Conflict Resolution* | NQC |
| Ayurvedic Medicine & Surgery* | NQC |
| Unani Medicine & Surgery* | NQC |
| Textile & Clothing Technology | NQC |
| Food Science & Technology | 0.4702 |
| Siddha Medicine* | NQC |
| Nursing | 0.4562 |
| Information & Communication Technology | NQC |

## KILINOCHCHI DISTRICT

| | |
|---|---|
| Medicine | 1.3783 |
| Dental Surgery | 1.3408 |
| Veterinary Science | 1.2654 |
| Agriculture | 1.0621 |
| Food & Nutrition | 0.9516 |
| Biological Science | 0.8140 |
| Applied Science (Bio. Sc.) | 0.8036 |
| Engineering (MPR) | 1.0318 |
| Engineering (EM) | 0.9413 |
| Engineering (TM ) | 0.9023 |
| Quantity Surveying | 0.8406 |
| Computer Science | 0.8968 |
| Physical Science | 0.2766 |
| Surveying Science | 0.8643 |
| Applied Science (Phy. Sc.) | 0.1560 |
| Management Studies | 1.4653 |
| Estate Management & Valuation | 1.4510 |
| Commerce | 1.4602 |
| Arts* | 1.2767 |
| Arts (SP)* - Mass Media | N Q C |
| Arts (SP)* - Performing Arts | N Q C |
| Arts (SAB)* - A | N Q C |
| Arts (SAB)* - B | N Q C |
| Management Studies (SV) - A | 1.4400 |
| Management Studies (SV) - B | 1.4295 |
| Architecture | N Q C |
| Design | N Q C |
| Law | 1.4007 |
| Information Technology | 0.6258 |
| Management & Information Technology | N Q C |
| Public Management (Administration) | 1.5159 |
| Town & Country Planning | 1.2718 |
| Peace & Conflict Resolution* | N Q C |
| Ayurvedic Medicine & Surgery* | N Q C |
| Unani Medicine & Surgery* | N Q C |
| Textile & Clothing Technology | N Q C |
| Food Science & Technology | 1.0574 |
| Siddha Medicine* | N Q C |
| Nursing | 0.7585 |
| Information & Communication Technology | NQC |

## MULLAITIVU DISTRICT

| | |
|---|---|
| Medicine | 1.3913 |
| Dental Surgery | 1.3318 |
| Veterinary Science | 1.2303 |
| Agriculture | 0.8599 |
| Food & Nutrition | 1.2290 |
| Biological Science | 0.7394 |
| Applied Science (Bio. Sc.) | 0.7381 |
| Engineering (MPR) | 1.3126 |
| Engineering (EM) | 1.2694 |
| Engineering (TM ) | 1.3004 |
| Quantity Surveying | 1.0593 |
| Computer Science | 0.9709 |
| Physical Science | 0.6887 |
| Surveying Science | 1.1634 |
| Applied Science (Phy. Sc.) | 0.5892 |
| Management Studies | 1.5999 |
| Estate Management & Valuation | 1.5684 |
| Commerce | 1.5863 |
| Arts* | 1.3071 |
| Arts (SP)* - Mass Media | N Q C |
| Arts (SP)* - Performing Arts | N Q C |
| Arts (SAB)* - A | N Q C |
| Arts (SAB)* - B | N Q C |
| Management Studies (SV) - A | 1.5628 |
| Management Studies (SV) - B | 1.5330 |
| Architecture | N Q C |
| Design | N Q C |
| Law | 1.5981 |
| Information Technology | 0.9658 |
| Management & Information Technology | 0.7094 |
| Public Management (Administration) | 1.5201 |
| Town & Country Planning | 1.4535 |
| Peace & Conflict Resolution* | N Q C |
| Ayurvedic Medicine & Surgery* | N Q C |
| Unani Medicine & Surgery* | N Q C |
| Textile & Clothing Technology | N Q C |
| Food Science & Technology | 0.9390 |
| Siddha Medicine* | N Q C |
| Nursing | 0.6803 |
| Information & Communication Technology | 0.4676 |

## VAVUNIYA DISTRICT

| | |
|---|---|
| Medicine | 1.7742 |
| Dental Surgery | 1.7643 |
| Veterinary Science | 1.7400 |
| Agriculture | 1.4702 |
| Food & Nutrition | 1.6251 |
| Biological Science | 1.3636 |
| Applied Science (Bio. Sc.) | 1.3430 |
| Engineering (MPR) | 1.9288 |
| Engineering (EM) | 1.8003 |
| Engineering (TM ) | 1.9114 |
| Quantity Surveying | 1.8714 |
| Computer Science | 1.7459 |
| Physical Science | 1.1853 |
| Surveying Science | 1.6667 |
| Applied Science (Phy. Sc.) | 1.0038 |
| Management Studies | 1.5924 |
| Estate Management & Valuation | 1.6300 |
| Commerce | 1.5560 |
| Arts* | 1.3695 |
| Arts (SP)* - Mass Media | N Q C |
| Arts (SP)* - Performing Arts | N Q C |
| Arts (SAB)* - A | 1.3543 |
| Arts (SAB)* - B | 1.5351 |
| Management Studies (SV) - A | 1.5465 |
| Management Studies (SV) - B | 1.5431 |
| Architecture | N Q C |
| Design | N Q C |
| Law | 1.8627 |
| Information Technology | 1.8624 |
| Management & Information Technology | N Q C |
| Public Management (Administration) | 1.6777 |
| Town & Country Planning | 1.6261 |
| Peace & Conflict Resolution* | N Q C |
| Ayurvedic Medicine & Surgery* | N Q C |
| Unani Medicine & Surgery* | N Q C |
| Textile & Clothing Technology | N Q C |
| Food Science & Technology | 1.6769 |
| Siddha Medicine* | 0.8420 |
| Nursing | 1.4419 |
| Information & Communication Technology | 1.5885 |

## BATTICALOA DISTRICT

| | |
|---|---|
| Medicine | 1.7272 |
| Dental Surgery | 1.7020 |
| Veterinary Science | 1.7013 |
| Agriculture | 1.3538 |
| Food & Nutrition | 1.6491 |
| Biological Science | 1.1636 |
| Applied Science (Bio. Sc.) | 1.1188 |
| Engineering (MPR) | 1.4590 |
| Engineering (EM) | 1.3658 |
| Engineering (TM ) | 1.3843 |
| Quantity Surveying | 1.3936 |
| Computer Science | 1.3394 |
| Physical Science | 0.7650 |
| Surveying Science | 1.3161 |
| Applied Science (Phy. Sc.) | 0.7632 |
| Management Studies | 1.3900 |
| Estate Management & Valuation | 1.3714 |
| Commerce | 1.3371 |
| Arts* | 1.3695 |
| Arts (SP)* - Mass Media | N Q C |
| Arts (SP)* - Performing Arts | N Q C |
| Arts (SAB)* - A | 1.3543 |
| Arts (SAB)* - B | N Q C |
| Management Studies (SV) - A | 1.3258 |
| Management Studies (SV) - B | 1.3496 |
| Architecture | N Q C |
| Design (Architecture) | N Q C |
| Law | 1.7647 |
| Information Technology | 1.5574 |
| Management & Information Technology | 1.4668 |
| Public Management (Administration) | 1.3000 |
| Town & Country Planning | 1.5219 |
| Peace & Conflict Resolution* | N Q C |
| Ayurveda* | N Q C |
| Unani* | 1.1074 |
| Textile & Clothing Technology | N Q C |
| Food Science & Technology | 1.6668 |
| Siddha Medicine* | 0.8420 |
| Nursing | 1.3627 |
| Information & Communication Technology | 1.4230 |

(will continue...)

Notes * Selection 100% on an all island Merit Basis NQC – No Qualified Candidates Management Studies (SV) A - Commerce Stream B - All Streams Arts (SAB) A - Arts Stream B - All Streams

## சேவையை உறுதிப்படுத்தும் நடவடிக்கை

# யாழ். செயலகத்தின் அசமந்தப்போக்கால் சமுர்த்தி உத்தியோகத்தர்கள் பாதிப்பு

(காரைநகர்)

யாழ்.மாவட்ட சமுர்த்தி அபிவிருத்தி உத்தியோகத்தர்கள் இன்னமும் சேவையில் உறுதிப்படுத்தப்படாததற்கு யாழ்.மாவட்ட செயலகத்தின் அசமந்தப் போக்கே காரணம் என யாழ். மாவட்ட சமுர்த்தி உத்தியோகத்தர்கள் கவலை தெரிவித்துள்ளனர்.


அறுநூறிற்கும் மேற்பட்ட சமுர்த்தி அபிவிருத்தி உத்தியோகத்தர்கள் சேவையிலீடுபடுத்தப்பட்டுள்ளர். யாழ். மாவட்டத்தில் சமுர்த்தித் திட்டம் முழுமையாக செயற்படுத்தப்படாவிடினும் சமுர்த்தி வங்கி நிதிச் செயற்பாடுகள். வலய வலுவூட்டல் செயற்பாடுகள் ஆரம்பிக்கப்பட்டு சிறப்பாக செயற்படுத்தப்பட்டு வருகின்றன.

இந் நிலையில் நாடளாவிய ரீதியல் கடந்தமாத இறுதிக்குள் சகல சமுர்த்தி அபிவிருத்தி உத்தியோகத்தர்களும் சேவையில் உறுதிப்படுத்தப்படல் வேண்டும் என்றும் இதற்கு சகல மாவடடச் செயலகங்களும் துரித நடவடிக்கை மேற்கொள்ளவேண்டும் எனவும் சமுர்த்தி அதிகார சபையினால் பணிக்கப்பட்டது.

ஆனாலும் யாழ்.மாவட்டச் செயலகத்தில் இதுவரை மேற்படி உத்தியோகத்தர்களை சேவையில் உறுதிப்படுத்த ஆக்கபூர்வமான நடவடிக்கைகள் மந்தகதியிலேயே மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

இதனால மேற்படி யாழ்மாவட்ட சமுர்த்தி உத்தியோகத்தர்கள் சேவையில் உறுதிப்படுத்தப்படாததால் சாதாரண அரச உத்தியோகத்தர்கள் அனுபவிக்கும் எந்த நலனையும் பெறமுடியாத நிலமையில் உள்ளனர்.

இதேவேளை, யாழ்.மாவட்டத்தில் உள்ள சகல பிரதேச செயலகங்களும் தத்தமது பகுதி சமுர்த்தி உத்தியோகத்தர்கள் தொடர்பான சேவை உறுதிப்படுத்தலுக்கான விபரங்களை மாவட்டச் செயலகத்திற்கு ஏற்கனவே அனுப்பிவிட்டதாகத் தொிவிக்கப்படுகின்றது. (ப-246)





யாழ்.மாநகரசபையில் கடமைபுரியும் சுத்திகரிப்புத் தொழிலாளர்கள் நேற்று மாநகரசபையின் முன்பாக மறியல் போராட்டத்தில் ஈடுபட்டுள்ளதைப் படங்களில் காணலாம். (படங்கள் :- ஐங்கரன்)


## பருத்தித்துறை பிரதேசசபை – புலோலி சந்தைகள் இறைச்சிக்கடைகளுக்கான

## மீள்கேள்வி அறிவித்தல் -2005

01. கேள்விப்பத்திரம் வழங்கும் திகதி:- 15.12.2004 நண்பகல் 12.00 மணிவரை.
02. கேள்விப்பத்திரம் ஏற்றுக் கொள்ளும் திகதி :- 16.12.2004 முற்பகல் 11.30 மணிவரை
03. கேளவ' திறக்கப்படும் திகதி :- 16.12.2004 பி.ப.2.00 மணி
04. கேள்வித்தொகை கேள்விப்பத்திரப்பணம் ஆகியவற்றுக்குப் பெறுமதி சேர்க்கப்பட்டவரி 15% சேர்த்து அறவிடப்படும்.
05. மேலதிக விபரங்களை பருத்தித்துறை பிரதேச சபை தலைமை அலுவலகத்தில் அறிந்து கொள்ளலாம்.
06. கேள்விப் படிவங்களின் ஒரு பிரதி உள்ளூராட்சி உதவி ஆணையாளருக்கு பதிவுத்தபாலில் அனுப்பி வைப்பதுடன் மறுபிரதியை இவ் அலுவலகத்திற்கு நேரிலோ அன்றேல் பதிவுத்தபாலிலோ சேர்ப்பித்தல்வேண்டும்.

| குத்தகை விபரம் | ஆகக்குறைந்த கேள்வித தொகை | மீளளிக்கப் படும் கேள்வி வைப்புப பணம் | மளளிக்கப் படாத கேள்வி பத்திரப பணம் |
|---|---|---|---|
| 01.மானாண்டி சந்தை | 178200.00 | 5000.00 | 500.00 |
| 02.பொற்பதிமன் சந்தை | 50200.00 | 1500.00 | 500.00 |
| 03.மருதங்கேணி சந்தை | 1980.00 | 500.00 | 250.00 |
| 04.மநதிகை ஆட்டிறைச் சிக்கடை | 222760.00 | 5000.00 | 500.00 |

பருத்தித்துறை பிரதேசசபை புலோலி.
08.12.2004

சிதம்பரப்பிள்ளை பசுபதி
செயலாளர்,
பருத்தித்துறை பிரதேசசபை,
புலோலி. (C/828)


## பயிற்சி நெறி

(காரைநகர்)

யாழ்.மாவட்ட சமுர்த்தி முகாமையாளர்களிற்கான சமூக அபிவிருத்தி பற்றிய பயிற்சிநெறி ஒன்று யாழ்.செயலக மாநாட்டு மண்டபததில் நடைபெறவுள்ளது.

யாழ்.மாவட்ட சமூகசேவை அபிவிருத்தி நிறுவனத்தால் இம்மாதம் 14,15 ஆம் திகதிகளில் நடாத்தப்படவுள்ள இப்பயிற்சிநெறி காலை 8:30 மணி முதல் மாலை 4.00 மணிவரை நடைபெறவுள்ளது.

மேற்படி பயிற்சி நெறிகளில் யாழ்.மாவட்ட சமுர்த்தி முகாமையாளர்களை பங்குபற்ற அனுமதிக்குமாறு யாழ் மாவட்ட மேலதிக அரச அதிபர் ஆ.சிவசுவாமி சகல பிரதேச செயலர்களையும் கடிதம் மூலம் கேட்டுள்ளார். (ப-246)

## தடுப்பூசி ஏற்றல்

(சாவகச்சேரி)

கோழிகளுக்கு, அம்மை நோய் ஏற்பட்டு வருவதனைத் தொடர்ந்து அதற்கான தடுப்பூசி மருந்து இருவாரத்திற்கு ஒரு தடவை புதன்கிழமைகளில் ஏற்றப்படும் என்று சாவகச்சேரி கால்நடை வைத்திய அதிகாரி திருமதி மகேந்திரராசா தெரிவித்துள்ளார்.

அத்துடன் கால்நடைகளை நுளம்பு, இலையான்களிலிருந்து பாதுகாக்க தெளி மருந்து விநியோகிக்கப்பட்டு வருவதாகவும் அவர் மேலும தெரிவித்துள்ளார். (ப-29)

## திருட்டு

(கல்வியங்காடு)

கல்வியங்காடு 3 ஆம் கட்டை சந்தியிலுள்ள வானொலி மற்றும தொலைக்காட்சி திருத்தும கடை ஒன்றில கடந்த செவ்வாய்க்கிழமை இரவு 12.00மணியளவில் திருட்டுப போயுள்ளது.

கடை உரிமையாளர் கடையைப பூட்டி விட்டுச் சென்ற சந்தர்ப்பம் பார்த்து இத் திருட்டுச் சம்பவம் இடம் பெற்றுள்ளதாக தெரிவிக கப்பட்டுள்ளது. இதில் சுமார் 36 ஆயிரம் ரூபா பெறுமதியான பொருட்கள திருட்டுப்போயுள்ளது.(ப-74)

## நெடுந்தீவு கடற்பரப்பில் கைதான

## 13 இந்திய மீனவர்களுக்கும்

# 22 ஆம் திகதி வரை விளக்கமறியல்!

(யாழ்ப்பாணம்)

இலங்கைக் கடற்பரப்பில் அத்துமீறி மீன்பிடித் தொழிலில் ஈடுபட்டிருந்த சமயம் நெடுந்தீவுக் கடற்பரப்பில் வைத்து 13 இந்திய மீனவர்கள் கடற்படையினரால் கைது செய்யப்பட்டுள்ளனர்.

கடந்த புதன்கிழமை கைது செய்யப்பட்ட மேற்படி 13 இந்திய மீனவர்களும் நேற்று முன்தினம் ஊர்காவற்றுறை நீதிமன்றத்தில் ஆஜர்செய்யப்பட்டனர்.

மேற்படி 13 மீனவர்களில் 3 பேர் படகோட்டிகள். இவர்கள் அனைவரையும் எதிர்வரும் 22 ஆம் திகதி வரை விளக்கமறியலில் வைக்குமாறு உத்தரவிடப்பட்டுள்ளது.

இதனையடுத்து, மேற்படி 13 இந்திய மீனவர்களும் யாழ். சிறைச்சாலையில் விளக்கமறியலில் வைக்கப்பட்டுள்ளனர். இவர்களது படகுகள் கடற்படையினரால் கைப்பற்றப்பட்டு வைக்கப்பட்டுள்ளன. (ற)

# போதைப் பொருள் ஒழிப்பு ஆண்டாக 2005 ஐ பிரகடனப்படுத்தத் தீர்மானம்

(கொழும்பு)

நாட்டில் இதுவரை அதிகாரத்துக்கு வந்த எந்தவொரு அரசியல் கட்சியும் போதைப் பொருள் பாவனையைக் கட்டுப்படுத்துவதற்கு நடவடிக்கைகள் எதனையும் எடுக்கவில்லையென ஜாதிகஹெல உறுமயவின் பாராளுமன்ற உறுப்பினர் சங்கைக்குரிய கொட்டப்புல அமரகீர்த்திதேரர் சுட்டிக்காட்டியுள்ளார்.

கொழும்பில் நேற்று முன்தினம் இடம்பெற்ற ஊடகவியலாளர் மாநாட்டில் உரையாற்றும் போதே அவர் இவ்வாறு தெரிவித்துள்ளார்.

போதைப் பொருள் பாவனையைக் கட்டுப்படுத்துவதற்கு அது தொடர்பான அமைப்புகள், சுகாதார நிறுவனங்கள், அரச சார்பற்ற நிறுவனங்கள், ஆலயங்கள், மதவழிபாட்டு ஸ்தலங்கள போன்றனவற்றின் ஒத்துழைப்புடன் விசேட திட்டங்கள் நடைமுறைப்படுத்தப்படவேண்டும்.

நவீன சந்தைகளில் மது விற்பனையை நிறுத்த அரசாங்கம் நடவடிக்கை எடுக்கவேண்டும். அப்போது தான் போதைப் பொருள் பாவனையை நாட்டில் கட்டுப்படுத்த முடியும்.

அடுத்த ஆண்டைப் போதைப் பொருள் ஒழிப்பு ஆண்டாகப் பிரகடனபபடுத்த ஜாதிக ஹெல உறுமய தீர்மானித்துள்ளது எனவும் அவா மேலும் தெரிவித்தார். (ற-8)

# ‘விளக்கு’ சஞ்சிகை நடாத்திய எழுத்தாக்கப் போட்டி முடிவுகள்

(யாழ்ப்பாணம்)

உலக ஆசிரியர் தினத்தையொட்டி தமிழீழக் கல்வி மேம்பாட்டுப் பேரவையின் வெளியீடாகிய ‘விளக்கு’ நடாத்திய தமிழ் மொழி எழுத்துத்தாக்கத்திறன் போட்டியில் வெற்றியீட்டியோரின் பெயர் விபரம் வெளியாகியுள்ளது. அவற்றின் விபரம் வருமாறு:-

### கட்டுரை

1 ஆம் இடம்:- மு.மோகனேந்திரன் - திரு /ஈச்சந்தீவு விபுலானந்த வித்தியாலயம்.

2 ஆம் இடம் :- கே.ஞானரெத்தினம் - மட்/சிவானந்த வித்தியாலயம்.

3 ஆம் இடம் :- திருமதி கோகுலவாணி- தேவராஜா - மு/மல்லாவி மத்திய கல்லூரி.

### சிறுகதை

1 ஆம் இடம் :- யோசப் ஆரோக்கியம் - குரூஸ் மடுவலயக கல்விப் பணிமனை.

2 ஆம் இடம் :- மு.இராசநாயகம் - யா/கனகரத்தினம் மத்திய மகாவித்தியாலயம்.

3 ஆம் இடம் :- செல்வி.இரத்தினேஸ்வரி சிவசிதம்பரம் - முகாமைத்துவ உதவியாளர், கண்டாவளைக் கல்விக் கோட்டம்.

### கவிதை

1 ஆம் இடம் :- திருமதி எம்.வீ.எ.ஃப். ஸ"ல்.ஃபிகா - ஹொ/அல் கஸ்ஸாலி மத்திய கல்லூரி.

2 ஆம் இடம் :- அருட்சகோதரி ஞா.இமல்டா சுபாஜினி வவு/தேசியக் கல்வியற்கல்லூரி.

3 ஆம் இடம் :- செல்வி ரத்தினேஸ்வரி சிவசிதம்பரம் முகாமைத்துவ உதவியாளர், கண்டாவளைக் கல்விக்கோட்டம்.

### விமர்சனம் எழுதுதல்

1 ஆம் இடம் :- கா.சசிதரன் யா/அளவெட்டி அருணோதயாக்கல்லூரி.

மேற்படி போட்டி முடிவுகள் யாவும் ஆக்கப் பரிசீலனைக் குழுவால் தெரிவு செய்யப்பட்டு இறுதி முடிவு எடுக்கப்பட்டவையாகும்.

மேற்படிப் போட்டிகளில் கட்டுரை மற்றும் சிறுகதை போன்ற ஆக்கங்களில் முதல் மூன்று இடங்ளையும் பெற்றவர்களுக்கு முறையே 10 ஆயிரம், 7 ஆயிரத்து 500, 5 ஆயிரம் ரூபாப் பணப் பரிசில்களும் கவிதை ஆக்கத்தில் வெற்றியீட்டியவர்களுக்கு முறையே 5 ஆயிரம், 3 ஆயிரம், 2 ஆயிரம் ரூபா பணப்பரிசில்களும், விமர்சனம் எழுதுதலுக்கு 5 ஆயிரம் ரூபா பணப்பரிசிலும் வழங்கப்படவுள்ளன.

வெற்றியாலர்களுக்கான பரிசில்கள் யாவும் எதிர்வரும் ஜனவரி மாதத்தில் வழங்கப்படவுள்ளன. (ற-19)

# கிழக்கு பல்கலை மருத்துவ பீடத்திற்கு 50 மாணவர்கள் உள்ளீர்க்கப்படுவர்

(திருகோணமலை)

கிழக்குப் பல்கலைக்கழகத்தில அடுத்த ஆண்டு ஆரம்பிக்கபபடவுள்ள மருத்துவ பீடததுக்கு 50 மாணவர்கள் அனுமதிக்கப்படவுள்ளதாக உபவேந்தர் கலாநிதி ரவீந்திரநாத் தெரிவித்துள்ளார்.

ஆறு பிரிவுகளாக இந்த மருத்துவபீடம் கிழக்குப் பல்கலைக்கழகத்தில் அடுத்த ஆண்டு முதல் இயங்கவுள்ளது.

கடந்த நவம்பர் மாதம் 23 ஆம் திகதி வெளியிடப்பட்ட விசேட வர்த்தமானி அறிவித்தலிலேயே ஜனாதிபதியினால் இதற்கான அங்கீகாரம் வழங்க்கப்பட்டுள்ளதாக உபவேந்தர் தெரிவித்துள்ளார்.

நீணடகாலமாக இது குறித்துத் தொடர்ச்சியாக விடுக்கப்பட்ட வேண்டுகோள்களை அடுத்தே இந்த மருத்துவ பீடத்தை ஆரம்பிப்பதற்கான அங்கீகாரத்தை ஜனாதிபதி வழங்கியுள்ளார்.

வடக்கு-கிழக்கில் அமையவிருக்கும் இரண்டாவது மருத்துவபீடம் இதுவென்பது குறிப்பிடத்தக்கது. (ற-4)

## இன்று ஒரு தகவல்

# உணவும் உறக்கமும்

சில விடயங்களைக் கூறும்போது இவை விஞ்ஞானிகள் சொன்னவை என்பேன். அதற்கு நிரூபணம் உண்டு. அதாவது சோதனைச்சாலையில் நிரூபித்துக்காட்டி வெளியிட்ட உண்மைகள். சில விடயங்களைக் கூறும் போது இது மெய்ஞ்ஞானிகள் சொன்னது என்பேன். அந்த உண்மைகளுக்கெல்லாம் ஆராய்ச்சிக் கூடங்கள் கிடையாது. நிருபணம் கிடையாது. அவை அனுபவத்தில் கண்ட உண்மைகள்.

அதனால் பெரியவர்கள் ஒன்றைச் சொன்னால் அதை நிரூபித்துக் காட்டினால்தான் நம்புவேன் என்று கூறக் கூடாது. பொய் சொல்லாதே என்று சொன்னால் "சொன்னால் என்ன?" என்று கேட்கக்கூடாது. ஆனாலும் நமது முன்னோர்கள் சொல்லிவைத்த பல உண்மைகளை இப்போது விஞ்ஞானமும் ஒத்துக்கொள்ள ஆரம்பித்து விட்டது. இவ்வளவையும் ஏன் சொல்கிறேன் என்றால் "சாப்பிடுவது எப்படி?" தூங்குவது எப்படி? என்பதைப் பற்றியெல்லாம் நமது முன்னோர்கள் சொல்லிவைத்திருக்கின்றனர். அவற்றில் சிலவற்றைச் சொல்கிறேன்.

சாப்பிடுவதற்கும் தூங்குவதற்கும் நமக்கு இன்னொருவர் சொல்லிக்கொடுக்க வேண்டிய அவசியமில்லை. இருந்தாலும் அவர்கள் என்ன சொல்கின்றனர் என்று பார்க்கலாமே. முதலில் கைகாலைக் கழுவிக்கொண்டு சாப்பிட உட்கார வேண்டுமாம். சாப்பிடும்போது கோபம் வரக்கூடாதாம். சாப்பிட்டுக் கொண்டிருக்கும் போது தேவையில்லாமல் பேசக்கூடாது. அவசரமாகச் சாப்பிடக் கூடாது. எவ்வளவு தான் அவசரமாக இருந்தாலும் கூட நின்று கொண்டு சாப்பிடக்கூடாது. உட்கார்ந்துதான் சாப்பிடவேண்டும்.

பண்டிகை நாட்களில் எல்லோரும் உட்கார்ந்து சாப்பிடவேண்டும். சாப்பிடுவதற்கு வாழைஇலைதான் மிகவும் நல்லதாம். வெள்ளிக்கிண்ணம் நல்லதாம். புவரச இலை, சீமைப்பூவரச இலை பரவாயில்லையாம். தாமரை இலையைப் பின்புறம் சுத்தம் செய்து சாப்பிடலாமாம். ஆலமிலை நல்லதில்லையாம். வாழை மட்டையும் பரவாயில்லை. மண் சட்டியில் சாப்பிட்டால் உடலுக்குக் குளிர்ச்சியாம். வெள்ளித் தாம்பாளத்தில் பால் சோறு சாப்பிட்டால் உடலில் உள்ள ரத்தம் சுத்தமாகுமாம். இதைக் கேட்கும்போது கிடைக்காததைச் சொல்கிறேனே என்று ரத்தம் சூடாகும் உங்களுக்கு. இருந்தாலும் அறிந்து வைத்துக்கொள்வது நல்லதுதானே.

தங்கப் பாத்திரத்தில் சாப்பிடுவது ஆண்களுக்கு மிகவும் நல்லது. மனதிற்கு சந்தோஷம் கொடுக்குமாம். வாத நாடி, பித்தநாடி போன்றவற்றைச் சமநிலையில் வைக்குமாம். இதனால் நோய்வராது. இருக்கிறநோயும் குறையும். வெள்ளிப்பாத்திரம், வெண்கலப் பாத்திரம் போன்றவை உடல் சோர்வை நீக்கும். ரத்த பித்த ரோகங்களைப் போக்கும். அலுமினியப் பாத்திரம் உடலுக்கு நல்லதில்லையாம். இரவு உணவு எப்படி இருக்க வேண்டும் தெரியுமா? நீண்டநேரம் கழித்துச் சாப்பிடக் கூடாது. இரவில் கீரை, நெல்லிக்காய், முள்ளங்கி போன்றவையும் தயிரும் வேண்டாமாம்.

இரவில் பால்சோறு நல்லது. இது பகலில் வேண்டாம். இரவு உணவில் மிளகு, சீரகம் சேர்ப்பதும் நல்ல தாம். காலையில் இஞ்சி, மததியானம் சுக்கு, இரவில் கடுக்காய் மருந்துக்கும் சாப்பாட்டுக்கும் இது மிகவும் பொருத்தம்.

சரி சாப்பிட்டாகி விட்டது, உறங்குவது எப்படி? படுக்கையை நன்கு உதறிப்போடவேண்டும். முறைப்படி இடது பக்கம் படுத்து காலை நீட்டிக்கொண்டு தூங்குவது சிறப்பு. இது ஆயுளை அதிகப்படுத்துமாம். வடக்கில் தலை வைதது்ப் படுக்கக்கூடாது. உத்தரத்திற்கு அடியில் படுக்கக்கூடாது.

இலவம் பஞ்சுத் தலையணை மிகவும் நல்லது. மூளையைப் பாதுகாக்கும். பருத்திப் பஞ்சு மன உளைச்சல், சலனம் போன்றவற்றை உருவாக்குமாம். சாப்பிடும்போது நடுவே தண்ணீர் குடிக்கவேண்டாம். தாகம், விக்கல் எனபன வந்தால் மட்டும் குடிக்கலாம். எந்தவகைப் பாத்திரத்தில் நீர் குடிக்கிறோமோ அந்தவகைப் பாத்திரத்திற்குத் தகுந்தபடி தண்ணீரின் குணம் மாறுமாம்.

எதற்கு இவற்றைப்போய் வேலை இல்லாமல் சொல்லிக்கொண்டிருக்கிறாய் என்று கேட்காதீர்கள். புகழையும், பணத்தையும், பதவியையும் எவ்வளவு சேர்த்தாலும் என்ன பயன்? நிம்மதியாகச் சாப்பிடவேண்டும. நிம்மதியாக உறங்கவேண்டும் அவ்வாறு இல்லாத வாழ்க்கை வீண்.

எங்கள் ஊரில் உள்ள ஒரு பெண்மணி மிக நன்றாகச் சமைப்பார். வகை வகையாகச் சமைத்து வாழையிலையில பரிமாறி வைத்துவிட்டு கணவரைக் கூப்பிடுவார் எப்படித்தெரியுமா?

"இதோ எடுத்துவைத்திருக்கிறேன் வந்து கொட்டிக் கொள்ளுங்கள்" அவரும் கோபப்படாமல் வந்து கொட்டிக் கொண்டு போய்விடுவார்.

தென்கச்சி கோ. சுவாமிநாதன்

# தேசியப் பிரச்சினைகளைத் தீர்ப்பதற்கு ஐ.தே.க. அரசுடன் ஒத்துழைக்கும்

## பேராசிரியர் ஜீ.எல்.பீரிஸ்

(கொழும்பு)

நோர்வே அனுசரணையாளர்கள் வெளியேற வேண்டுமென ஜே.வி.பி. வற்புறுத்திவரும் அதேநேரத்தில், ஜனாதிபதி நோர்வே அரசு அனுசரணையாளராகத் தொடர்ந்தும் நீடிக்க வேண்டுமெனக் கூறிவருவது ஆளும் கூட்டணிக்குள் முரண்பாடுகள் நிலவிவருவதற்கு சாட்சியமாக இருக்கிறது என பேராசிரியர் ஜீ.எல்.பீரிஸ் தெரிவித்துள்ளார்.

கடநத புதன்கிழமை எதிர்கட்சித் தலைவர் அலுவலகத்தில் நடைபெற்ற பத்திரிகையாளர் மாகாநாட்டில் கருத்துத் தெரிவிக்கையிலேயே அவர் இவ்வாறு குறிப்பிட்டுள்ளார்.

அவர் அங்கு தொடர்ந்தும் கருத்து வெளியிடுகையில், தேசிய முக்கியத்துவம் வாய்ந்த பிரச்சினைகளைத் தீர்ப்பதில் ஜனாதிபதிக்கு அக்கறையில்லை. தனது சொந்த முன்னேற்றத்துக்காக அரசியலமைப்பை மாற்றுதல், சபாநாயகரைப் பதவியிலிருந்து அகற்றுதல, பாராளுமன்றத்தை அரசியலமைப்புச் சபையாக மாற்றுதல் போன்றவற்றிலேயே அவர் அக்கறை கொண்டவராக இருக்கிறார்.

நோர்வேத் தூதுவருக்கு ஜே.வி.பி.எழுதிய கடிதத்தில், சமாதான நடவடிக்கைகளில் நோர்வே அனுசரணையாளர்களாகச் செயற்படுவதை நிறுத்துமாறும், நோர்வே நடுவு நிலையானதாக இல்லாமல் விடுதலைப் புலிகளுக்குச் சார்பாகச் செயற்படுவதாகவும் அதனால் தங்களுக்கு நோர்வே மீது நம்பிக்கையில்லை என்றும் குறிப்பிடப்பட்டிருந்தது.



யுத்தநிறுத்த ஒப பந்தம் இலங்கைக்கு எதிரானது என ஜே.வி.பி.கருதினால், இவ் ஒப்பந்தம் சட்ட விரோதமானதென மேன்முறையீட்டு நீதிமன்றத்தில் வழக்குத் தொடர்வதற்குப் பதிலாக அரசாங்கத்தில் முக்கிய பங்காளிகளென்ற நிலையைப் பயன்படுத்தியிருக்கலாமே?

ஐக்கிய தேசியக்கட்சி தேசிய முக்கியத்துவம் வாய்ந்த பிரச்சினைகளைத் தீர்ப்பதற்கு அரசாங்கத்துடன் ஒத்துழைக்கத் தயாராக இருக்கிறது. கூடிய விரைவில் பேச்சு நடத்தப்படும்.

தேர்தல் சீர்திருத்தம், சமாதான முன்னெடுப்புகள், பொருளாதார அபிவிருத்தி ஆகிய விடயங்களில் அரசுடன் ஒத்துழைக்கத் தயாராக இருக்கிறோமே தவிர முன் குறிப்பிட்ட மற்றைய வற்றுக்காக அல்ல எனக்குறிப்பிட்டார். (ந)

# வன்முறையாளர்களுக்கு அரசின் ஆதரவும், ஒத்துழைப்பும் தாராளம்

## ஜெயலத் எம்.பி.தெரிவிப்பு

(கொழும்பு)

பாதாள உலகக் குழுவினருக்கும், கிரிமினல் குற்றவாளிகளுக்கும் அரசாங்கத்தரப்பின் ஆதரவும் ஒத்துழைப்பும் இருப்பதாக ஐக்கிய தேசியக் கட்சியின் பாராளுமன்ற உறுப்பினர் டாக்டர் ஜயலத் ஜயவர்த்தன தெரிவித்துள்ளார்.

அத்தகைய நிலையில் நாட்டின் நீதித்துறையிலும், பொலிஸ் துறையிலும் ஜனாதிபதி குற்றம் கண்டுபிடிக்க முயல்வது வேடிக்கைக்கு உரியது என்றும் அவர் தெரிவித்தார்.

நாட்டில் வன்முறைகள் அதிகரித்துக்கொண்டே செல்கினறன. யுத்தத்தால் அழிவை எதிர்நோக்கிய மக்கள் தற்போது வன்முறைகளால் அழிவை எதிர் கொள்கின்றனர் எனக்குறிப்பிட்ட அவர்,

நாட்டில 20வருடங்களாக இடமபெற்ற கொடூர யுத்தத்திற்கு எமது அரசின் அதாவது எமது கட்சியின் ஆட்சிக்காலத்தில் முடிவுகட்டப்பட்டது.

அனால் தற்போதைய அரசு மீணடும் ஒரு யுத்தத்தை ஆரம்பிப்பதற்கே கங்கணம்கட்டுகிறது என்றும் குற்றஞ்சாட்டினார். (க)

## இராசி பலன்

**11.12.2004**
**(கார்த்திகை 26 சனிக்கிழமை)**
**சதுர்த்தசி முற்பகல் 9.47 மணிவரை**
**அனுசம் பிற்பகல் 3.21 மணிவரை**
**இராகுகாலம் -9.20- 10.50 மணிவரை**
**சுபநேரம் -3.20-4.50 மணிவரை**
**விநாயகர் விரதம் 15ம் நாள்**
**அமாவாசை விரதம்**

**மேடம்** எதிர்பாராத பிரச்சினை, காரிய தடங்கல், உடல் நலக்குறைவு, பணக்குறைவு.

**இடபம்** பெருமையடைதல், களஸ்திர நன்மை, நல்ல செய்தி, நண்பர்கள் சந்திப்பு.

**மிதுனம்** காரிய அனுகூலம், விருந்துபசாரம், செல்வாக்கு, தன வருவாய்.

**கடகம்** வியாபார நன்மை, புத்திரரால் கவலை, சிறு வியாதி, கௌரவக் குறைவு.

**சிங்கம்** மனச் சோர்வு, தாய்வழி உறவு, புதிய தகவல், காரிய தாமதம்.

**கன்னி** சகோதரர் உதவி, நல்ல வரவேற்பு, காரிய அனுகூலம், போசன சுகம்.

**துலாம்** கடுமையான வார்த்தை, முயற்சி தாமதம், பண விரயம், வேலைச்சுமை.

**விருச்சிகம்** சிந்தனை மிகுதி, நல்ல முயற்சி, நண்பர்கள் சந்திப்பு, போசன சுகம்.

**தனுசு** அமைதிக் குறைவு, இடமாற்றம், காரிய தாமதம், பண விரயம்.

**மகரம்** போசன சுகம், சகோதரர் உதவி, கீர்த்தி, காரிய அனுகூலம்.

**கும்பம்** அதிகாரம், தொழில் முன்னேற்றம், புதிய விடயம், விருந்துபசாரம்.

**மீனம்** புதிய திட்டமிடல், எதிர்பாராத செலவு, முயற்சி தாமதம், பிரயாணம்.

பழைய நேரப்படி கணிப்பிடப்பட்டது - வளவன்

## சுகாதார ஊழியர் வெற்றிடங்கள் மிக விரைவில் நிரப்பப்படும்

(கொழும்பு)

வடக்கு-கிழக்கு மாகாணத்திலுள்ள எட்டு மாவட்டங்களிலும் இயங்கும் மாகாண சபையின் நிர்வாகத்துக்குட்பட்ட வைத்தியசாலைகளில் நிலவும் சுகாதார ஊழியர் வெற்றிடங்கள் மிக விரைவில் நிரப்பப்படவுள்ளன.

இதற்கான நேர்முகப் பரீட்சை கடந்த ஆகஸ்ட் மாதத்தில் நடைபெற்றது. 2ஆவது நேர்முகப் பரீட்சை கடந்த செவ்வாய்க்கிழமை ஆரம்பமாகித் தொடர்ந்து நடைபெற்று வருகிறது.

இந்த நேர்முகப்பரீட்சை எதிர்வரும் 17ஆம் திகதி வரை எட்டு மாவட்டங்களிலும் நடைபெறவுள்ளது.

மேற்படி எட்டு மாவட்டங்களிலுமுள்ள மாகாண வைத்திய சாலைகளில் சுமார் ஆயிரத்துக்கும் அதிகமான வெற்றிடங்கள் உள்ளமை குறிப்பிடத்தக்கது. (ந-9)

## வல்வெட்டித்துறையில் கால்நடை வைத்திய அதிகாரி உப அலுவலகம் ஒன்றை அமைக்குக

வல்வெட்டித்துறையில் கால்நடை வைத்திய அதிகாரியின உப அலுவலகம் ஒன்றைத் திறக்குமாறு வல்வெட்டித்துறை தொண்டைமானாறு, பொலிகண்டி மக்கள் சம்பந்தப்பட்டவர்களிடம் கோரிக்கை விடுத்துள்ளனர்.

பருத்தித்துறைப் பிரதேசத்திற்கான கால்நடை வைத்ய அதிகாரி அலுவலகம் மந்திகையில் இயங்கி வருகிறது. மேற்படி பகுதி மக்கள் பலமைல் தூர பயணம் மேற்கொண்டு மந்திகை கால்நடை வைதகிய அதிகாரி அலுவலகத்திற்கு செல்ல வேண்டியுள் ளது.

இதனால் பல்வேறு நடைமுறைச் சிக்கல்களையும், வைத்திய தேவைகளுக்காக கால்நடைகளை வைத்தியசாலைக்கு எடுத்துச்செல்லமுடியாத நிலையும் காணப்படுகின்றது.

எனவே, வல்வெட்டித்துறை, தொண்டைமானாறு, கெருடாவில், உடுப்பிட்டி, வல்வெட்டி, பொலிகண்டி ஆகிய பகுதி மக்கள் பயன்பெறக்கூடிய இடத்தில் கால்நடை வைத்திய அதிகாரியின் உப அலுவலகம் ஒன்றைத் திறக்குமாறு அப்பகுதி மக்கள் கோரிக்கை விடுத்துள்ளனர். (ப-35)

# சுவாமி யோகேஸ்வரானந்தாஜியின் ஆன்மீகப் பணிகள்

**க.சிவலிங்கம**
**ஓய்வுபெற்ற பிரதித் திட்டமிடல பணிப்பாளர், வடக்கு-கிழக்கு மாகாணசபை.**

சுவாமி யோகேஸ்வரானந்தா 1940ஆம் ஆண்டு கொழும்பு நகரத்தில் பிறந்தார். அவர் தமது ஆரம்பக் கல்வியை றோயல் கல்லூரியிலும், அதன் பின் சிறிது காலம் யாழ்ப்பாணக் கல்லூரியிலும், அக்குவானஸிலும் பயின்றார். அவரது தந்தையாா முத்துபாலசூரியர் மின்சாரத் திணைக்களத்தில் பொதுமுகாமையாளராக தலைமைப் பதவி வகித்தார்.

சுவாமிஜி யோகர் சுவாமிகளுடைய வழிகாட்டலில் தமது 20வது வயதில் ஆத்மீக வாழவில் நாட்டம் கொண்டு துறவறத்தை நாடி இமாலயத்திற்குச் சென்றார். பன்னிரண்டு வருடங்களாக சமய சாஸ் திரங்களுக்கு முக்கிய கல்விஸ்தானமாக விளங்கும் கைலாஷ் ஆச்சிரமத்தில் பேரரறிவு மிக்க சுவாமிகள் பலரிடம் ஆன்மீக கல்வி பயினற பின்னர் துறவு பூண்டு 1974 இல் சங்கர அத்வைத மடத்தில் தீட்சை பெற்றார். அவர் ரிஷிகேசம், உத்தரகாசி,கங்கோதரி போன்ற இடஙகளை இருப்பிடமாகக் கொண்டுள்ளார். அவருக்கு மிக விருப்பமான வசிப்பிடம் 10000 அடி உயரத்திலுள்ள கங்கோதரி மலைக்குகை ஆகும். தற்போது உத்தரகாசி யில ஓர் ஆச்சிரமம் அமைத்துள்ளார்.

1980 ஆம் ஆண்டு நீண்ட இடைவெளிக்குப் பின்னர் இலங்கைக்கு வந்து முதன்முறையாக சுவாமிகள சமயம் பகவத்கீதை மற்றும் உபஷத சொற்பொழிவுகள் நிகழ்த்தினாா. அதன் பின்னர் அவர் இலங்கை மட்டுமல்லாது மேற்கு நாடுகளுக்கு விஜயம் செய்து அங்கெல்லாம் சமயத்தின் உலகளாவிய ஆன்மீக உண்மைகளைப் பரப்பி வருகிறார். இந்த நாடுகளில் உண்மையைத் தேடும் மக்களுக்கு சமய விரிவுரைகளை ஆற்றிவருகிறார். இதில் ஐக்கிய இராச்சியம்/ஐக்கிய அமெரிக்கா, கனடா,அவுஸ்திரேலியா,சுவிஸ் போன்ற நாடுகள் அடங்கும்.அமெரிககாவிலுள்ள பல சர்வகலாசாலைகளிலும் தேவாலயங்களிலும் சுவாமிஜி அவர்கள் உரையாற்றியுள்ளார். மேலும் அவர் ஐக்கிய அமெரிக்கா, கனடா போன்ற நாடுகளில தொலைக்காட்சி, வானொலி, நேர்காணல் நிகழ்ச்சிகள் பலதிலும கலந்துள்ளார். தற்போது வருடந்தோறும உலக நாடுகள் பலவற்றிற்கு சென்று ஆன்மீகப் பணியினை மேற்கொண்டு வருகிறார்.

சுவாமிஜி அவர்கள் கடவுளை அடைவது இலட்சியம் அல்ல. கடவுள நிலையை அடைவதுதான் வாழ்வின இலட்சியம் என்று கூறுகின்றார். ஐந்து கோசங்களுக் குள்ளும் வியாபகமாய் இருப்பது தான் கடவுள் தத்துவம். அதை உணர்ந்து அனுபவித்து நடப்பது தான் வாழ்க்கையின் இலட்சியமாகும். கடவுள் தத்துவம் நான் தான் என்று அறியும்போது நாம் ஆனந்த நிலையை அடைகிறோம் என்றும் கூறுகிறார்.

நாங்கள் உள்ளே பார்க்காமல் வெளியே பார்க்கின்றோம். கடவுளை வெளியில் பார்க்கமுயற்சி செய்கின்றோம். ஆனால் அப்படிப் பார்ககமுடியாது. கடவுளை உள்ளே பார்ப்பதற்கு ஞானம் வேண்டும்.

பதி,பசு,பாசம் என்ற முப்பொருள உண்மையைச் சைவ சித்தாந்தம் கூறுகின்றது. பாசத்தினால் மனிதன் மிருகமாகின்றான். பாசத்தை விட்டுவிட்டால், அதே மனிதன் பதியாக அதாவது தானே சிவதத்துவம் என்பதை உணரமுடியும். சிவத்தத்துவம் நம் உள்ளே இருக்கின்றது. கடவுள் தத்துவத்தை எங்கே அனுபவிப்பது? உங்கள் மனமும் இதயமும் தான் அனுபவிக்க வேண்டும ஆகையால் மனத்தையும் இதயத்தையும் பக்குவப்படுத்த வேண்டியது அவசியம்.

கடவுள் அனுபவம் பெறுவதற்கு தகுதி வேண்டும். அத்தகுதியை பெறுவதற்கு மனதைத் தூய்மைப் படுத்த வேண்டும். தற்போது மனம் வேறு எண்ணங்களில் ஆழ்ந்திருக்கின்றது. மனதில் உலக எண்ணங்களின் விருப்பு வெறுப்புகள் உண்டு. இவை கடவுள் அனுபவத்திற்கு தடையாக இருக்கின்றன. எனவே, மனத்தையும் இதயத்தையும் சுத்தம செய்வதன் மூலம் கடவுள் அனுபவம் கிடைக்கும்.

சுவாமிஜி கர்மயோகம் பற்றி மிகத் தெளிவாகப் பல இடங்களில வளக்கியுள்ளார். கர்மங்களை கர்மயோகமாகச் செய்வதே மனிதனை புனிதமாக்கும் முக்கிய சாதனம் என்பதையும் கர்மத்தை செய்யும் போது விருப்பு வெறுப்புகளை பாராமல அவற்றை கடமை என்ற சமத்துவ புத்தியுடன் செய்வதை சுவாமிஜி வலியுறுத்துகின்றார். எந்தெந்தக் கர்மங்கள் உன்னுடையவை என்பதை ஒருவருக்கு அவரின் மனச்சாட்சி சொல்லும். அந்தக் கடமைகளை விருப்பு வெறுப்பின்றி அன்புடனும் மகிழ்வுடனும் செய்ய வேண்டும். அப்படிச் செய்வது தான் உண்மையான கர்மயோகமாகும்.

எனவே உலகில் வாழும் மனிதன முதற்படியாக தார்மீக சீவியத்தை கடைப்பிடிக்கவேண்டும். அதனால் புண்ணியம் கிட்டும். புண்ணியம் வளரப் பாவம் குறையும். பாவம் குறைய மனம் தூய்மையாகும். தூய்மை அதிகரிக்க தெளிவு ஏற்படும். தூய்மையும் தெளிவும் அமைய விவேகமும் வைராக்கியமும் வந்தடையும். இவற்றினால் உலகப் பறறு அகன்று கடவுள் அன்பு வளரும். படிப்படியாக ஞானம் பிறக்கும். ஞானம் பிறந்ததும் மனிதன் ஞானி ஆவான். கடவுள் நிலையை அடைவதுதான் வாழ்வில் இலட்சிய மாகும். கடவுள் நிலைதான் கடவுள தத்துவம் அல்லது சிவதத்துவம்

> **இன்றையதினம் யாழ்ப்பாணம் வருகை தரவுள்ள சுவாமியோகேஸ்வரானந்தாஜி நாளையும், நாளை மறுதினமும் குடாநாட்டின் பல்வேறு இடங்களில் ஆன்மீகப் பேருரைகளை நிகழ்த்தவுள்ளார்.**

எனகிறோம். கடவுள் தத்துவம் நான் தான் என்ற அறிவே ஞானமாகும்.

கிருஷ்ண பகவான் பகவத் கீதையிலே ஆத்மீக வாழ்க்கையில ஈடுபடுபவர்க்கு இரு வேறு வழிகளைக் காட்டியிருக்கின்றார். முதலாவது ஞானமாகும். இது சந்நியாசிகளுக்கு உரியது. இரண்டாவது இல்லற வாழ்க்கையில் இருப்பவர்கள் கர்மத்தை கர்மயோகமாகச் செய்யப் பயில வேண்டும். கர்மம் வேறு வாழ்க்கை வேறல்ல. கர்மமே வாழ்க்கை. எனவே நாம் நிறை வேற்ற வேண்டிய கர்மங்களை அன்புடன் நிறைவேற்ற வேண்டும். கர்மங்களை அன்புடன் செய்தால் நம் வாழ்க்கையும் அன்பு நிறைந்ததாக இருக்கும் என்கிறார் சுவாமிஜி.

இன்றைய கல்வி, அறிவை மட்டும் வழங்குவதோடு நின்று விட்டது. அறிவன் மூலம் ஆக்கபூர்வமான செயல்களைச் செய்வது எப்படி என்பதனை இளைஞர்களுக்கு கூறத்தவறிவிட்டது. இளம் தலைமுறையினரிடம் பல்வேறு ஆற்றல்கள் நிறைந்திருந்த போதிலும் சமூகத்திற்கான பங்களிப்பு குறைவாகவே இருக்கின்றது. அவர்கள் சமூகத்தை அளுமைப்படுத்திக் கொள்ள வேண்டும். சமூகத் தொண்டிலும் ஆன்மீகப் பணியிலும் முழு அர்ப்பணிப போடு பணியாற்றக் கூடிய இளம தலைவர்கள் தேவைப் படுகிறார்கள். ஏன் இன்று பல அபிவிருத்திப் பணிகளிலும் கூட இளந் தலைமுறைகளின் பங்களிப்பு தேவைப்படுகிறது. இவற்றிற்கு எல்லாம் அடிப்படையாக எமது மனப்பாங்கில் (attitudinal change) மாற்றம் ஏற்பட வேணடும். இதுதான் உண்மையான அபிவிருத்திப் பாதையில் எம்மையும் நாட்டையும் இட்டுசசெல்லும். சமயம இன்று வெறும் பக்தியை தோற்று விக்கிறதே அல்லாமல் பக்தியின் இலக்கு எது என்பதனைத் தெளிவாக கூறவில்லை.

உண்மையான பக்தன் யார் என்பதை சுவாமிஜி பகவத்கீதையின 12ம் அத்தியாயத்திற்கு கொடுத்திருககும் விளக்கத்தில் தெளிவாகக கூறியிருக்கிறார். விஞ்ஞானத்தை மட்டும் முழுமையாக நம்பி ஆன்மீகத்தை அடியோடு புறக்கணிப்பது தவறு. விஞ்ஞானம் நம்முடைய அனைத்துப் பிரச்சினைகளையும் தீர்த்துவிடும், ஆன்மீகத்திற்கு இனி வேலையில்லை என்று எண்ணினோம. ஆனால் இன்று விஞ்ஞானமும ஆன்மீகமும் இணைந்தாலொழிய மனித சமுதாயத்திற்கு வேறுமார்க்கம இல்லை என்பதனைப் பல அறிஞர்கள் கூறிவருகிறார்கள்.

சுவாமிஜியின் அறிவு சார்ந்த போதனைகள் இன்றைய கால கட்டத்தில் எமது மனச்சோர்வை அகறறும். எப்படி தனது தர்மத்தை பற்றிய குழம்பிய மனுமுடையவனான அர்ஜுனன் தர்மம் எது? அதர்மம் எது?-செய்ய வேண்டியது என்ன? செய்யத் தகாதது என்ன? என்கின்ற கேள்விகளுக்கு சரியான முடிவு எடுக்க முடியாமல் பாரத யுத்தத்தின் மத்தியல் இருந்தானோ அது போ்ன்றதே எமது நிலையும். எனவே இன்றைய நிலையில் நாம் கர்மயோகத்தின் அடிப்படை அம்சங்களை நன்கு புரிந்து வாழ்க்கையை வாழப் பழக வேண்டும்.

சுவாமிஜியின் "ஞானத்தின் செயற்பாடு"(Wisdom In Action) போன்ற நூலகளில் இக்கருத்துக்களை நன்று விளக்கியுள்ளார்கள். இவை இனறைய இளஞ் சந்ததியினர் தமது அளுமையை விருத்தி செய்வதோடு சமூகத்தற்கு பயனுள்ள வகையில் தம்மை நெறிப்படுத்தவும் உதவும் என்பதில் சந்தேகமில்லை. □

## காணாமல் போனோர் விடயம் குறித்து

# ஜனாதிபதியுடன் பேச்சு நடாத்த ஏற்பாடுகளைச் செய்து தருக!

### அன்னையர் முன்னணி ம.உ.ஆ. குழுவிடம் மகஜர்

(யாழ்ப்பாணம்)

சாவதேச மனித உரிமைகள் தினமான நேற்று யாழ்.மாவட்ட அன்னையா முன்னணியினர், இலங்கை மனித உரிமைகள் ஆணைக்குழுவின் யாழ்.மாவட்ட அலுவலக முனறலில உண்ணாவிரதப் போராட்டத்தில் ஈடுபட்டனர்.



படையினரால் கைது செய்யப்பட்டுக் காணாமல் போனவர்கள் மீண்டும் உயிருடன் கிடைக்கப்பட வேண்டும் என்பதற்காக இவர்கள் தீப ஒளியேற்றி இறை பிரார்த்தனை செய்து உண்ணாவிரதப் போராட்டத்தில் ஈடுபட்டனர்.

அத்துடன் இவ் உண்ணாவிரதப் போராட்டத்தின் ஆரம்ப வைபவததில மனிதநேய அமைப்புக்களின் தலைவர் எஸ்.பரமநாதன், கியூடெக் நிறுவனத்தின் தலைவா வணபிதா ஜெயக்குமாா அடிகள் மற்றும் பாராளுமனற உறுப்பினர் சீ.வி.கே. சிவஞானம ஆகியோரும் கலந்து கொண்டனர்.

இதேவேளை இப் போராட்டத்தின போது அன்னையர் முன்னணி யின தலைவி செ.கனகாம்பிகை, இலஙகை மனிதஉரிமைகள் ஆணைச் குழுவின் யாழ்.மாவட்ட அலுவலக இணைப பாளர் றுவான் சந்திரசேகரவிடம் மகஜர் ஒன்றையும்கையளித்தா அவ அறிக்கையின் விபரம் வருமாறு:-

எமது அன்னையர் முன்னணி உங்களுக்கு தெரியப்படுத்துவது, கடந்த 1996ல் 300 இலங்கைத் தமிழ இளைஞர்கள், யுவதிகள் படையினரால கைது செய்யப்பட்டுக்காணாமல போயுள்ளனர்.

பல முறை எமது அன்னையர் முன் னணி தங்களுக்குப் பல மகஜர்களை இது சம்பந்தமாக கையளித்தது.

இது சில தமிழ் தமிழ் குழுவினரும் படையினரும் திட்டமிட்டுச் செய்த ஒரு நடவடிக்கையாகும்.கைதான தமிழ இளைஞர்கள் யுவதிகள் உணமையில் விடுதலைப் புலிகளைச சார்ந்தவர்களல்ல.

தற்பொழுது நாம் மனித உரிமைகள் ஆணைக்குழு இணைப்பதிகாரியிடம் கோருவது, இது விடயமாக கௌரவ ஜனாதிபதியை எமது முன்னணி உறுப்பினர் 10 பேர் சந்திததுப பேசுவதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டும் என்பதே.

இவ்விடயம் பற்றி ஜனாதிபதியுடன நேரடியாக உரையாடி ஒரு தீககமான முடிவை இந்த அபலைப பிள்ளைகளுக்காகப் பேசி உண்மை நிலையைத் தெரிந்து ஆகவேண்டிய நட வடிக்கைகளை மேற்கொள்ள ஓர் சந்திப்பை ஜனாதிபதியுடன் ஏற்படுத்தித தருமாறு வேண்டுகினறோம் எனக் குறிப்பிடப்பட்டுள்ளது. (ற-19)

## பதிவு நடைமுறை

(புங்குடுதீவு)

நயினாதீவிற்குச் செல்வோர் குறிகாட்டுவான் துறைமுகத்தில் வைத்து கடற்படையினரால் பதிவு செய்யப்பட்ட பின்னரே தொடர்ந்து செல்ல அனுமதிககப்படுகின்றனா.

நீண்டகாலமாக எவ்வித பதிவும் மேறகொள்ளாமல் நயினாதீவு சென்று வந்த மக்கள் திடீரென ஆரம்பிக்கப்பட்ட பதிவு நடைமுறைகள் காரணமாக விசனம் தெரிவிக்கின்றனர். (ச-126)

## தொண்டர்களுக்கு துவிச்சக்கர வண்டிகள்

(ஊர்காவற்றுறை)

ஊர்காவற்றுறைப் பிரதேசத்தில் கடமையாற்றும் சமூக சேவைத் தொண்டர்கள் 6 பேருக்கு துவிச்சக்கர வண்டிகள் வழங்கப்படவுள்ளன.

யு.என்.எச்.சி.ஆர் நிறுவனத்தினால் ஊர்காவற்றுறைப் பிரதேச செயலர் பிரிவில் கடமையாற்றும் சமூக சேவைத் தொண்டர்களில் 6 பேருக்கே இத் துவிச்சக்கர வண்டிகள் வழங்கப்படவுள்ளன.

இதேவேளை ஊர்காவற்றுறைப் பிரதேசத்தில் 15 தொண்டர்கள் கடமையாற்றி வருகின்றமை குறிப்பிடத்தக்கது. (ற-75)

## தீவக அபிவிருத்திக்கு எம்.பிக்களின் நிதிஉதவ'

2005 ஆம் ஆண்டுக்கான பன்முகப்படுத்தப்பட்ட வரவு-செலவுத் திட்ட ஒதுக்கீட்டின் கீழ் யாழ் மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர்களினால் ஒதுக்கப்பட்ட நிதியில் வேலணை பிரதேச செயலக கிராம அபிவிருத்திகளுக் கென 19 லட்சத்து, 62 ஆயிரத்து 550 ரூபா நிதி ஒதுக கீடு செய்யப்பட்டுள்ளது.

புஙகுடுதீவு, வேலணை, மண்டைதீவு, அல்லைப்பிட்டி, நயினாதீவ போன்ற கிராமங்களிலுள்ள சனசமூக நிலையங்கள், கிராம அபிவிருத்த சங்கஙகள், சர்வோதயம் என்பவற்றினூடாக இந் நிதியானது பயன்படுத்தப்படவுள்ளது. (ப-126)

## விபரங்கள் கோரல்

(சாவகச்சேரி)

தென்மராட்சிப் பிரதேசத்தில் நெற்செய்கையில் ஈடுபட்டு வெள்ளத்தினால் பாதிக்கப்பட்ட விவசாயிகள தமது பாதிப்புகள் பற்றிய விபரங்களை தத்தமது பகுதி விவசாய சம்மேளனத் தலைவர்கள் ஊடாகச் சமர்ப்பிககும்படி தென்மராட்சிப் பெரும் போக உத்தியோகத்தர் செல்வி என்.ஜெகதீஸ்வரி கேட்டுள்ளார். (ப-29)

## வருடாந்த ஒன்று கூடல்

(ஊர்காவற்றுறை)

யாழ்-மறைமாவட்ட புனித -மரியாயின் சேனையின் வருடாந்த ஒன்றுகூடல் நிகழ்வு இன்று சனிக்கிழமை காலை 10.00 மணிக்கு யாழ் மறைக்கல்வி நடு நிலைய மண்டபத்தில் மரியாயின் சேனை ஆத்மீக இயக்குனர் அருட்திரு றெஜிஇராசேஸ்வரன் அடிகள் தலைமையில் நடைபெறவுள்ளது. (ப)

## இசை நிகழ்ச்சி

நல்லை திருஞான சம்பந்தர் ஆதினம் நடாத்தும் மாதாந்த இசை நிகழ்ச்சி நாளை ஞாயிற்றுக்கிழமை மாலை 5 மணிக்கு ஆதினக்கலா மண்டபத்தில் இடம் பெறவுள்ளது.

சுன்னாகம் ஸ்கந்தவரோதயக் கல்லூரி உப அதிபர் செஞ்சொற் செல்வர் ஆறுதிருமுருகன் தலைமையில் நடைபெறவுள்ள இந் நிகழ்வில், யாழ்-பல்கலைக்கழக முன்னாள் துணைவேந்தர் பேராசிரியர் பொன் பாலசுந்தரம்பிள்ளை பிரதம விருந்தினராகக் கலந்து கொள்ளவுள்ளார். (க)

## பொறுப்பதிகாரி நியமனம்

வட பிராந்தியப் போக்குவரத்துச் சபையின் யாழ் பஸ் நிலையப் பொறுப்பதிகாரியாக ந.லோகநாதன் கடந்த முதலாம் திகதியிலிருந்து நியமனம் செய்யப்பட்டுள்ளார்.

முன்னர் இதற்குப் பொறுப்பதிகாரியாக இருந்த த.யோகநாதன் பருத்தித்துறை சாலைமுகாமையாளராக நியமனம் செய்யப்பட்டுள்ளார். (ற)

# க.பொ.த (சாதாரண தரம்) மாதிரிப் பரீட்சை -2004

## விஞ்ஞானமும் தொழிநுட்பவியலும் பகுதி II

நேரம்: 3மணி

ஆக்கம் : திருமதி.வி.ஜெகதீசன்,
(பயிற்றப்பட்ட விஞ்ஞான ஆசிரியர்)
யா/ஆனைக்கோட்டை றோ.க.த.க. பாடசாலை.

*** முதலாம் வினா கட்டாயமானது. *முதலாம் வினாவுக்கும் மேலதிகமாக மேலும் ஏழு வினாக்களைத் தேர்ந்தெடுத்து எட்டு வினாக்களுக்கு விடைதருக.**

**(01)** பின்வரும் பகுதிகளை வாசித்து, கிரகித்து கீழே கேட்கப் பட்டுள்ள வினாக்களுக்கு விடை தருக.

இலங்கையின் உலர் பிரதேசத்தில் 1936ஆம் ஆண்டளவில் மலேரியா நோயைக் ஏற்படுத்தும் அனோபிலிஸ் நுளம்பின் எண்ணிக்கை மிக உயர்வாகக் காணப்பட்டது. இதனைக் கட்டுப்படுத்துவதற்கு **DDT** பாவிக்கப்பட்டது. இதன் காரணமாக 1965ஆம் ஆண்டளவில் மலேரியா நோயாளிகளின் எண்ணிக்கையானது கிட்டத்தட்ட **100%** கட்டுப்படுத்தப்பட்ட போதிலும் **DDT** ஓர் இலகுவில் பிரிகையடையாத சேர்வை என்பதால் இது போசனை மட்டத்தில் உச்சப்படியிலுள்ள அங்கிகளின் உடலில் செறிவடைவதனால் அவ் அங்கிகளுக்கு பாதிப்பு ஏற்படும் என்பதால் இதன் பாவனை கைவிடப்பட்ட ஒருசில வருடங்களில் திடீரென மீண்டும் மலேரியா நோயாளிகளின் எண்ணிக்கை அதிகரித்தது. எனவே மீண்டும் **DDT** பாவனை அறிமுகப் படுத்தப்பட்டது.

**DDT** பாவனைக்கு முன்பு அனோபிலிஸ் நுளம்பின் குடித் தொகை மிகையான பெருக்கம் காரணமாக உச்ச அளவில் காணப் பட்டது. இக்குடித்தொகையில் இயற்கையாகவே **DDT** எதிர்ப்புடைய பேதங்கள் காணப்பட்டன. **DDT** பாவனையின்போது இப்பேதங்கள் இயற்கையிலேயே தப்பிப்பிழைத்து வாழ்வதற்கான நிகழ்தகவு உயர்வாகக் காணப்பட்டது. ஏனைய தனியன்கள் அழிந்துபோயின. இப்போது **DDT** காணப்படும் சூழலானது **DDT** எதிர்ப்புடைய பேதங்களை மாத்திரம் தேர்ந்தெடுக்கின்றது. இத்தேர்ந்தெடுக்கப் பட்ட பேதங்கள் தொடர்ச்சியாக இனப்பெருக்கம் அடையும்போது **DDT** எதிர்ப்புத் தன்மையைத் தமது மரபு எச்சங்களுக்குக் கடத்திவிடும். இவ்வியல்பானது தொடர்ச்சியாக வரும் சந்ததிகளில் பேணப்பட்டு **DDT** எதிர்ப்புடைய நுளம்பினது குடித்தொகை மாறாது பேணப்படுகின்றது. இவ்வாறு டாவினின் இயற்கைத்தேர்வுக் கொள்கைப்படி விளக்கமளிக்கலாம். இத்தோடு டெங்குக் காய்ச்சல் இலங்கையில் முக்கிய சுகாதாரப் பிரச்சினையாக உள்ளது.

i) a.மலேரியா நோயை ஏற்படுத்தும் நுளம்பின் பெயர் யாது?
b.மலேரியா நோயைக் கட்டுப்படுத்த அரசு மேற்கொண்ட நடவடிக்கை யாது?

ii) a.புல் ⟶ மான் ⟶ மனிதன் எனும் உணவுச் சங்கிலியின் எப்போசனை மட்டத்தில் **DDT** செறிவு உச்சளவில் காணப்படும்.
b.நீர் மேலே (ii)aயில் குறிப்பிட்ட அங்கியில் **DDT** செறிவடைவதற்கான காரணம் யாது?

iii) a.டாவினின் கொள்கைப்படி **DDT** எதிர்ப்புடைய பேதங்கள். சூழலில் எவ்வாறு தோன்றுகின்றன?
b.டாவினின் கொள்கைப்படி இயற்கையினால் எவ்வாறு **DDT** எதிர்ப்புடைய பேதங்கள் தேர்ந்தெடுக்கப்படுகின்றன என் விளக்குக.

iv) a.டெங்குக் காய்ச்சலை ஏற்படுத்தும் நுண்ணங்கி யாது?
b.டெங்குக் காய்ச்சலைப் பரப்பும் நுளம்பு இனம் ஒன்றினைத் தருக.
c.டெங்கு ஒழிப்புத்திட்டம் நாடளாவிய ரீதியில் மேற்கொள்ளப் பட்டுவருகின்றது. பாடசாலை மாணவராகிய நீர் இத்திட்டத்திற்கு உதவும் வழிமுறைகள் நான்கு தருக.

**(02)** மீன் வளப்பதற்கான நீரில்லம் ஒன்றை அமைத்த ஒரு மாணவன் அதனுள் நீர், மீன்கள் ஆகியவற்றுடன் சில நீர்த்தாவரங்களையும் இரண்டு நீர் நத்தைகளையும் இட்டார்.

i) அவன் அங்கு நீர்த்தாவரமாக இட்ட தாவரம் ஒன்றின் பெயரைத் தருக.

ii) நீர்த்தாவரம் ஒன்றில் உயிர்க்கலம் ஒன்றினுள் நிகழும் உயிர் தொழிற்பாட்டிற்கான சொற்சமன்பாடு கீழே தரப்பட்டுள்ளது.

$CO_2 + H_2O \longrightarrow$ குளுக்கோஸ் $+ O_2$

a.மேலேயுள்ள சமன்பாடு எந்த உயிர்த்தொழிற்பாட்டைக் குறிக்கின்றது?
b.நீர் அத்தொழிற்பாடு நடைபெறுவதற்கு அதில் தரப்பட்ட காரணிகளைத் தவிர அத்தியாவசியமான மற்றுமோர் புறக்காரணியையும், அகக்காரணியையும் குறிப்பிடுக.
c.மேலேயுள்ள சொற்சமன்பாட்டை இரசாயனக் குறியீடுகளைப் பயன்படுத்தி ஈடுசெய்வதற்குத் தாக்க சமன்பாட்டினால் எழுதுக.

iii) a.மீனில் அதிகளவு காணப்படும் உணவு வகையை எழுதுக.
b.மேலே நீர்கூறிய உணவு வகையை இனம்கண்டு கொள்வதற்கு ஒரு பரிசோதனையை எழுதுக.

iv) நீரில்லத்திலுள்ள நீரில் பொற்றாசியம் நைத்திரேற்று கரைந்துள்ளது. பொற்றாசியம் நைதரேற்றை வெப்பமேற்றும்போது அது பிரிகையடைந்து பொற்றாசியம் நைதரைற்றையும் ஓட்சிசனையும் கொடுக்கின்றது. 8g $O_2$வைப் பெறுவதற்கு வெப்பமேற்றி முற்றாகப் பிரிகையடையச் செய்யவேண்டிய பொற்றாசியம் நைதரேற்றின் ஆகக் குறைந்த திணிவு யாது? **(N-14, O-16, K-3g)**

v) யூரியா, அமோனியம் நைத்திரேற்று, அமோனியம் சல்பேற்று ஆகிய பசளைகள் தொடர்பான பின்வரும் வினாக்களுக்கு விடை தருக.
a.ஒவ்வொரு சேர்வையினதும் இரசாயனச் சூத்திரங்களைத் தருக.
b.ஒவ்வொரு சேர்வையினதும் சூத்திர திணிவைக் காண்க.
c.ஒவ்வொரு சேர்வையிலும் நைதரசன் மூலகத்தின் சதவீதத்தைக் காண்க.
d.வினா cயின் அடிப்படையில் ஏனைய உரங்களை விட யூரியா சிறந்ததாகக் கருதப்படுதவற்கான காரணம் யாது?

**(03)** i) மக்னீசியம், சோடியம்,, செம்பு, நாகம், இரும்பு ஆகிய உலோகங்களை அடிப்படையாகக்கொண்டு பின்வரும் வினாக்களுக்கு விடையளிக்குக.

a. அ) குளிர்நீருடன் ஐதரசன் வாயுவை தரக்கூடிய உலோகம் எது?
ஆ) மேற்படித் தாக்கத்திற்கான ஈடுசெய்த சமன்பாட்டைத் தருக?

b. அ) குளிர்நீருடன் தாக்கத்தைக் காட்டாத ஆனால் கொதிநீருடன் தாக்கமடைந்து ஐதரசன் வாயுவைத் தரும் உலோகம் எது?
ஆ) மேற்படி தாக்கத்திற்கான ஈடுசெய்த சமன்பாட்டைத் தருக.

c. அ) நீருடனான தாக்கத்தின் அடிப்படையில் மேற்படி உலோகங்களை தாக்கத்திறன் இறங்குவரிசைப்படி நிரற்படுத்துக.
ஆ) நீர் அமைத்த நிரல் எவ்வாறு அழைக்கப்படும்.

ii) செப்புசல்பேற்றுக் கரைசலினுள் இரும்புத் துண்டுகளை இட்டபோது அவதானிக்கக்கூடிய மாற்றங்கள் நடைபெற்றன.

a. அ) அத்தகைய மாற்றங்கள் மூன்றைத் தருக.
ஆ) மேற்படி தொகுதியில் நடைபெற்ற தாக்கத்திற்கான ஈடுசெய்த சமன்பாட்டைத் தருக.
இ) இரும்புத் துண்டுகளுக்குப் பதிலாக வெள்ளித் துண்டுகளை இட்டால் மேற்படி அவதானங்களை ஏன் பெறமுடிவதில்லை என விளக்குக.


b. வெள்ளி, இரும்பு, செம்பு ஆகியவற்றை அவற்றின் தாக்கு திறன்களுக்கேற்ப ஏறுவரிசைப்படுத்தித் தருக.

c. "தாக்கத் தொடர்" பற்றிய அறிவைப் பயன்படுத்தும் சந்தர்ப்பங்கள் மூன்று தருக.

iii) பின்வரும் கலப்புலோகங்கள் ஒவ்வொன்றும் பயன்படும் சந்தர்ப்பம் ஒவ்வொன்று தருக.

a. டியூரலுமின்
b. மென்பற்றாசு
c. கறையில் உருக்கு

**(04)** மனித செவியின் வரிக்கோட்டுப்படம் கீழே தரப்பட்டுள்ளது. இதனை அடிப்படையாக வைத்து கேட்கப்படும் வினாக்களுக்கு விடையளிக்குக.




i) மேலே உள்ள செவியின் **A,B,C,D,E** ஆகிய பகுதிகளைப் பெயரிடுக.

ii) a. அமைப்பு **B**யில் உள்ள மூன்று என்புகளையும் பெயரிடுக.
b. மனிதசெவி புறத்தாக்கத்திலிருந்து பாதுகாக்கும் முகமாக மண்டையோட்டிலுள்ள எவ் என்பிற்குள் அமைந்துள்ளது.
c. புறச்செவியை வந்தடையும் ஒலி அலைகள் தொடர்பான புலனுணர்வுகள் மூளைக்குச் சென்றடையும் விதத்தை பாய்ச்சற்கோட்டுப் படம்மூலம் தருக.

iii) செவியின் பிரதான தொழில்கள் இரண்டு தருக.

iv) a. மனித செவியின் புலனுணர்வு அதிர்வுவீச்சு யாது?
b. காதினுள் உட்புகும் தூசுத்துணிக்கைகள், நோய்க்கிருமிகள் எவ்வாறு உற்புகாது தடுக்கப்படுகிறது.

v) a. செவிப்பறையினால் பெறப்படும் அதிர்வுகளை விரியலாக்கி நீள் வட்ட பலகணி மென்சவ்விற்கு கடத்தும் அமைப்பு எது?
b. உடலின் சமநிலையைப் பேண உதவும் செவியின் பாகங்கள் எவை?

vi) தடிமன் ஏற்பட்டுள்ள ஒருவருக்கு காது அடைப்பு ஏற்படக் காரணம் யாது?

**(05)**

i) A- அங்கிகள் வாகனங்கள் ஏதோ ஓர் கதியுடன் நகர்ந்து செல்கின்றன. மாடு ஒன்று **$20ms^{-1}$** வேகத்திலும், மோட்டார் சைக்கிள் **$50ms^{-1}$** வேகத்திலும் ஒலி **$332ms^{-1}$** வேகத்திலும் ஒளி **$3x10^5kms^{-1}$** வேகத்திலும் பயணம் செய்கின்றது.

அ. இங்கு காட்டப்பட்டுள்ள மோட்டார் சைக்கிளின் கதியையும், மாட்டின் கதியையும் கிலோமீற்றர்/மணித்தியாலத்தில் காண்க.

ஆ. இடி, மின்னல் செயற்பாட்டில் மின்னல் முதலிலும் இடி சற்றுப் பின்னும் உணரப்படுவதற்கான காரணத்தை தரவின் உதவியுடன் விளக்குக.

ii) B- மருத்துவத்திலும், உயிர் தொழிற்நுட்பவியலிலும் பல்வேறு ஓமோன்கள் பயன்படுத்தப்படுகின்றது.

அ. பின்வரும் மூன்றுவகை ஓமோன்களும் பயன்படுத்தும் ஒவ்வோர் சந்தர்ப்பத்தையும் தருக.

1. இன்சுலின் 2.தைரொட்சின் 3.ஒட்சின்

iii) C- குருதி வழங்கலில் சில நடைமுறைகள் வைத்தியசாலையில் பின்பற்றப்படுகின்றது.

அ. பொதுவழங்கி என்பதை விளக்குக.

ஆ. X என்ற நபரின் குருதியை Y நபருக்கு பரிசோதனையின் பின் வைத்தியர் Yஎன்பர் அனுமதிக்க முடியாமல் உள்ளதாக குறிப்பிட்டால் அவ்வாறு அனுமதிக்காமைக்கு ஏதுவான இரண்டு காரணங்களையும் குறிப்பிடுக.

இ. சோதனைக்காக குருதி மாதிரியைப் பெறும்போது மேற்கொள்ள வேண்டிய பாதுகாப்பு நடவடிக்கைகள் யாது?

iv) D- ஓய்வில் இருக்கும் பொருளை இயக்குவதற்கும் அதன்மீது புற விசை பிரயோகிக்க வேண்டும். பொருளில் இயக்கப்பாட்டுச் சக்தி அதன் திணிவிலும் அதன் வேகத்திலும் தங்கியுள்ளது.

அ. 12kg திணிவுள்ள சிறிதான மோட்டார் சைக்கிள் ஒன்று $4ms^{-1}$ வேகத்தில் ஓடுகின்றது எனின் இயக்கப்பாட்டுச்சக்தி எவ்வளவு?

ஆ. உராய்வை இழிவாக கையாளத்தக்க உபாயங்கள் 3 தருக.

**(06)** இலங்கை உயர்ந்தளவில் கனியவளங்களைக் கொண்டுள்ளது. அத்துடன் இலங்கை இரத்தினக்கல் உலகில் பிரசித்திபெற்றுள்ளது. இரத்தினபுரி மாவட்டத்திலுள்ள பிரதேசங்களில் இரத்தினக்கல் பெருமளவில் காணப்படுகின்றன. அது அந்நியசெலாவணியை ஈட்டித்தருகிறது. இரத்தினக்கல் சுரங்கங்களில் இருந்து பெறப்பட்டு நீரோட்டத்தில் கழுவப்படும்.

i) நிலத்திலிருந்து இரத்தினக்கற்கள் பெறப்படுவது முதல் விற்பனைக்கு செல்லும் வரை மேற்கொள்ளப்படும் நடவடிக்கைகளை மிகச் சுருக்கமான ஒழுங்குமுறையில் தருக.

ii) இரத்தினக்கற்கள் முக்கியத்துவம் பெறுவதற்கான காரணங்கள் மூன்று தருக.

iii) இரத்தினக்கற்களின் சிறப்பியல்புகள் மூன்று தருக.

iv) இரத்தினக்கல் அகழ்வதால் நாட்டிற்கு ஏற்படக்கூடிய நன்மைகள் 2 தருக.

v) இரத்தினக்கல் அகழ்தெடுக்கும்போது சூழலிற்கு ஏற்படக்கூடிய பாதிப்புகள் மூன்று தருக.

vi) உமக்குத் தெரிந்த கனியங்கள் மூன்றைக் குறிப்பிட்டு அவற்றின் பயன்கள் ஒவ்வொன்று தருக.

vii) கனியங்கள் அகழ்ந்தெடுக்கும் இடங்களில் நுளம்பு பெருக்கம் அடைதலைத் தடுக்கும் முறை ஒன்றையும் அம்முறையினால் ஏற்படும் தீமையையும் குறிப்பிடுக.

**(07)** தரம் 11இல் கல்வி பயிலும் மாணவர்கள் சிலர் நண்பகல் நேரம் மிகவும் வெப்பமாக இருந்தமையால் கடைக்குச் சென்று சிலர் சோடா பானமும், சிலர் இளநீரையும் பருகினர். சோடாப்போத்தல் திறப்பதற்கு திறப்பானையும் பயன்படுத்தினர்.

i) இளநீரிலுள்ள உணவுக்கூறு எது?

ii) இளநீரை அம் மாணவன் வளிபடக் கூடியவாறு சில மணத்தியாலங்கள் திறந்துவைப்பின் இளநீர் எப்பொருளாக மாற்றமடையும்?

iii) அப்பொருள் மாற்றமடைந்தால் எவ்வாறு அழைக்கப்படும்?

iv) இளநீரைத் தொடர்ந்து ஐந்து நாட்கள் வளிபடுமாறு விடப்பட்டிருந்தால் பெறப்படக்கூடிய உற்பத்தி திரவப்பொருள் ஒன்று தருக.

v) நீர் மேற்கூறிய உற்பத்திப் பொருளை பெறுவதற்குரிய அமைப்பை வரைந்து காட்டுக.

vi) இளநீரைப் பருகிய மாணவர்கள் கோம்பையை அவ்விடத்திலேயே வீசினர். இவ்வாறு செய்வதால் ஏற்படும் தீமை ஒன்று தருக.


vii) சோடாப்பானம் திறக்கும்போது வெளியேறும் வாயு எது?

viii) சோடா திறப்பான் எவ்வகை நெம்பாகும்?

**(08)** திரவமொன்றில் குறித்த ஒரு புள்ளியில் அமுக்கமானது hpg எனும் வாய்ப்பாட்டால் தரப்படும்.

i) hpg என்பதில் h,p,g என்பன எவற்றைக் குறித்து நிற்கின்றது எனவும் அதன் அலகையும் தருக.

ii)





a. X ,Y புள்ளியில் அமுக்கத்தைக் காண்க.

b. X ,Y யில் அமுக்கம் சமமானதா? வேறுபட்டதா?

c. இதற்கான காரணம் யாது?

iii) படத்தில் காட்டியவாறு அமைப்பை அவதானித்து விடை தருக.




a. வளியில் பொருளின் நிறை யாது?

b. நீரின் பொருளின் நிறை யாது?

c. நிறைநட்டம் யாது?

d. மேலுதைப்பு யாது?

e. c,dக்கும் இடையே உள்ள தொடர்பு யாது?

f. இது எவ்விதிக்கு அமைகின்றது?

**(09)** விஞ்ஞான விளக்கம் தருக.

i) புதிதாக சுண்ணாம்பினால் வெள்ளையடிக்கப்பட்ட சுவர் சில மணிநேரம் கழிந்த பின்னர் பிரகாசமாகத் தோன்றும்.

ii) ஈயம், வெள்ளியம் ஆகியவற்றினாலான கலப்பு உலோகமே உருக்குகள் தயாரிக்கப் பொருத்தமானது.

iii) விவசாய நிலத்தில் , பயிர்களை விட களைகள் விரைவாக வளரும்.

iv) இரத்த உறவினர்களிடையே ஏற்படும் திருமண பந்தத்தினால் நோய்களுடன் கூடிய சந்ததி தோன்றலாம்.

v) கோடைகாலங்களில் சில தாவரங்களின் இலைகள் உதிர்கின்றன.

**(10) A.** புதிதாகத் தயாரிக்கப்பட்ட வாசனைச் சவர்க்காரம் ஒன்றின் உபயோகத்தினால் தோலின் கருமை நிறம் குறைந்து கொள்வதாக மக்களிடையே நம்பிக்கை இருந்தது. இதற்கு அச்சவர்க்காரத்தில் பாவிக்கப்படும் ஒரு குறித்த இரசாயனப்பொருள் காரணமாக இருக்கலாமோ எனச் சோதிக்க ஒரு விஞ்ஞானி விரும்பினார். இரண்டு குழுவினரைத் தெரிவுசெய்து அவர்கள் யாவரும் அச்சவர்க்காரத்தை ஒழுங்காகப் பாவிப்பதன் மூலம் தோலின் நிறம் கருமை குறைந்து அழகு பெறும் என அறிவித்தார். பின்னர் முதலாவது குழுவினர்க்கு அச்சவர்க்காரத்தையும், இரண்டாவது குழுவினர்க்கு அவ்விரசாயனப் பொருளற்ற அதே தோற்றத்தையும் அமைப்பையும் கொண்ட பிறிதொரு சவர்க்காரத்தையும் வழங்கினார்.

i) இப்பரிசோதனை விஞ்ஞான ரீதியானது என கருதக்கூடியமைக்குரிய காரணம் யாது?

ii) இரண்டு குழுவினரையும் தெரிவு செய்யும்போது அவ்விஞ்ஞானி கவனத்தில் எடுத்திருக்கவேண்டிய 2 விடயங்களைக் குறிப்பிடுக.

iii) பரிசோதனை முடிவுகள் அனுமானங்கள் தொடர்பாக நீர் எவ்வாறான முடிவுகளை மேற்கொள்ளலாம் எனக் காரணம் காட்டி விளக்குக.

**B.** பயிர்ச்செய்கைக்காகவும் குடியேற்றத்திற்காகவும் காடுகளை அழிப்பதால் ஏற்படக்கூடிய நன்மைகளைவிட தீமைகளே அதிகளவு உள்ளன. இது தொடர்பாக உமது கருத்துக்களைத் தருக. (மொத்தமாக 6 கருத்துக்கள் போதுமானது.)

## விஞ்ஞானமும் தொழிநுட்பவியலும் பகுதி Iஇன் விடைகள்

| | | | | |
|---|---|---|---|---|
| 01. 1 | 02.1 | 03.4 | 04.1 | 05.2 |
| 06.2 | 07.3 | 08.4 | 09.4 | 10.2 |
| 11.3 | 12.1 | 13.4 | 14.1 | 15.4 |
| 16.2 | 17.3 | 18.2 | 19.4 | 20.3 |
| 21.3 | 22.3 | 23.4 | 24.2 | 25.2 |
| 26.2 | 27.3 | 28.2 | 29.4 | 30.4 |
| 31.2 | 32.3 | 33.1 | 34.4 | 35.3 |
| 36.2 | 37.2 | 38.2 | 39.2 | 40.4 |

# ஊழியர் சேமலாப நிதியைச் செலுத்தாதுள்ள தொழிலதிபர்களுக்கு எதிராக சட்ட நடவடிக்கை

(கொழும்பு)

ஊழியர் சேமலாப நிதி சம்பந்தமாகவும் அது தொடர்பான செயற்பாடுகள் சம்பந்தமாக அந்தந்த நிறுவனங்களின் அதிகாரிகளுக்கு அறிக்கை ஒன்றைச் சமர்ப்பிக்குமாறு தொழிலாளர்கள் உறவுகள் அமைச்சர் அதாவுட செனிவிரத்ன பணிப்புரை விடுத்துள்ளார்.

ஊழியர் சேமலாப நிதிக்கொடுப்பனவில் காலதாமதம் ஏற்படுவதாக இது தொடர்பில் பாதிக்கப்பட்ட மக்கள் அமைச்சரின் கவனத்துக்கு கொண்டு வந்ததையடுத்து அமைச்சர் அதாவுட செனிவிரத்ன அண்மையில் நாவஹென்பிட்டியில் அமைந்துள்ள தலைமை அலுவலகத்துக்கு விஜயம் செய்திருந்தார்.

கடந்த வருடம் இதற்காக விண்ணப்பிக்கப்பட்டோரின் சுமார் 500க்கும் மேற்பட்ட விண்ணப்பங்கள், கவனிக்கப்படாமல் இருந்ததை அவதானித்த அமைச்சர், ஊழியர் சேமலாப நிதியக் கொடுப்பனவுகளை எத்தகைய தாமதமுமின்றி உடனடியாக வழங்குவதற்குரிய நடவடிக்கைகளை மேற்கொள்ளவென தனியான ஒரு பிரிவை அமைக்குமாறு உத்தரவிட்டார்.

அரச மற்றும் தனியார் துறை நிறுவனங்களில் அறுபது லட்சம் ஊழியர்கள் வரை கடமையாற்றி வருகின்ற போதிலும், சுமார் 2லட்சம் தொழிலாளர்கள் மாத்திரமே ஊழியர் சேமலாப நிதியத்திற்குப் பங்களிப்புச் செய்து வருகின்றனர்.

அதேசமயம் மொத்தம் 1லட்சத்து 50ஆயிரம் தொழிலதிபர்களில் 49ஆயிரம் தொழிலதிபர்கள் மட்டுமே ஊழியர் சேமலாப நிதியத்திற்கான கொடுப்பனவுகளை வழங்கி வருகின்றனர்.

ஊழியர் சேமலாப நிதிக் கொடுப்பனவைச் செலுத்தாத பல தொழிலதிபர்களுக்கு எதிராக சட்டநடவடிக்கைகளை எடுக்குமாறும் அமைச்சர் அதாவுட செனிவரத்ன அதிகாரிகளுக்குப் பணிப்புரை விடுத்துள்ளார்

(ரு-5)

# அதிபர் நியமனம்

(சுதுமலை)

யாழ்.மானிப்பாய் சோதிவேம்படி வித்தியாசாலைக்கு அதிபராகக் கடந்த 6ஆம் திகதி முதல் ந.அருட்பிரகாசம்பிள்ளை வலிகாமம் வலயக் கல்விப் பணிப்பாளரினால் நியமிக்கப்பட்டுள்ளார்.

இப்பாடசாலையில் அதிபராகக் கடமையாற்றிய ந.நடராஜா அண்மையில் ஓய்வுபெற்றதையடுத்தே, புதிய அதிபராக இவர் நியமிக்கப்பட்டுள்ளார்.

இப்புதிய அதிபர் சுதுமலை சின்மய பாரதி வித்தியாசாலையின் பிரதி அதிபராகவும், ஆரம்பப் பாடசாலையின் அதிபராகவும் கடமையாற்றியவராவார்.

(ரு-252)

## மீள் பார்வை

# யாழ்ப்பாணத் தமிழரசர் வரலாறும் காலமும்

வேலணை பண்டிதர் பொ.ஜெகந்நாதன்

5

### 04. கைலாயமாலை நூலமைப்பு

இக் கைலாயநாதன் தன்னை ஆட்கொண்டதும் தான் அவர்க்குக் கோயில் கட்டினதுமான இச் செய்திகள் என் வருங்கால இராச பரம்பரையும், இந்நாட்டு மக்கள் பரம்பரையும் அறியவேண்டும். ஆகையால் அதனை, அச் செய்தியை நூலாக எழுதி வெளியிட எண்ணினான். அப்படிச் செய்தாற்றான் கைலாயநாதனுக்கு நான் நன்றிக்கடன் செய்தவனாவேன். என் தாகமும் நிற்கும் என்று எண்ணியவனாய் அமைச்சர் அவையைக்கூட்டி யோசித்தான் அவர்கள் எல்லோரும் ஒரேமுகமாக அக் கருத்தை ஆமோதித்தார்கள். சரி அப்படியானால் அச் சங்கதிகள் எல்லாம் திரட்டி நூலாக எழுதக்கூடியவர் யார் அவரைத் தேடிச் சபைக்குக் கொண்டுவர வேண்டுமே. என் சமூகத்துக்குக் கொண்டு வரவேண்டுமே என்கின்றான் மன்னன். அப்பொழுது அவையினரில் பாண்டி மழவன் எழுந்து அரசே, சிங்களக் கலகங்களால் நாடு சீர்கெட்டிருக்கிறது. செந்தமிழ் வளர்ச்சிகுன்றி இருக்கிறது. இப்பொழுது இச் சம்பவங்களைப் பாடக்கூடிய சிறந்த புலவர்கள் இந்நாட்டில் இல்லை. சோழநாடு முதலிய தமிழ் நாடுகளில் தான் யாரும் சிறந்த புலவரைத்தேடி ஆராய்ந்துவரவழைத்து அவரைக்கொண்டுதான் எழுதுவது நல்லதென்று சொன்னார். அப்பால் சிங்கையாரியனும் அவர்கள் கூற்றை ஆமோதித்துக்கொண்டவனாய் பல தமிழ்நாடுகளிலும் விசாரணைசெய்து இறுதியில் சோழ மன்னரின் பழைய தலைநகராகிய உறையூரிலே சோழ இராசாங்கப் புலவராய் செந்தியப்பர் மகன் முத்து இராசக் கவிராயர் என்றொரு பெரும்புலவர் இருப்பதாகக் கேள்விப்பட்டான். அவரைத்தான் சபைக்கு அழைக்க மன்னன் விரும்பினான். உடனே ஒரு தூதுவனை அழைத்து சோழ மன்னனுக்கு ஒரு திருமுகம் எழுதி அவன் கையிற்கொடுத்து இதைச் சோழமன்னன் கையிற்கொடுத்துவாவென்று அனுப்பினான். தூதுவன் மறுநாளே வெளிப்பட்டு சோழ நாட்டுக்குப் போய் சோழ அரசன் கையில் ஓலையைக் கொடுத்தான். சோழமன்னன் அதனை வாசித்துப் பார்த்தான். "உறையூரிலே, தலைநகரிலே வசிக்கும் செந்தியப்பர் மகன் முத்துராசக் கவிஞரை தன் சபைக்கு அனுப்பிவைக்கும்படி எழுதப்பட்டிருந்தது.

மறுநாள் சோழமன்னன் தன் அரண்மனைத் தூதுவர் ஒருவரை அழைத்து உறையூர் சோழரின் பழைய தலைப்பட்டணம் காவிரி நதிக்கரையில் உள்ளது. நீவீர் உறையூர் சென்று செந்தியப்பர் மகன் முத்துராசக் கவிராயரிடம் ஈழச்சிங்கையாரிய மன்னன் எனக்குச் செய்த வேண்டுகோளையும் அவ்வேண்டுகோளின்படி புலவரை ஈழச்சிங்கை ஆரிய மன்னன் சமஸ்தானத்துக்குச்செல்ல நாளை அதிகாலை புறப்பட்டுப்பிரயாணத்தை மேற்கொள்ளும்படியும் நான் சொன்னதாகச் சொல்லிவா என்றனுப்பினான். தூதுவனும் அவ்வாறே அப்புலவரிடம் சொன்னான்.

புலவர் அம்மன்னன் கட்டளையை ஒப்புக்கொண்டவராய் தாம் மறுநாளே ஈழநாட்டுச் சிங்கையாரிய மன்னனிடம் செல்ல இருப்பதாகவும் இச் செய்தியைச் சோழ இராசாவுக்கறிவிக்கும படியும் சொல்லியனுப்பினார். தூதுவன் தான் புலவரைச் சந்தித்த விவரங்களை யெல்லாம் சோழ மன்னனிடம் எடுத்துச்சொன்னான். சோழன் அங்கே தங்கி இருந்த சிங்கை மன்னன் தூதுவனிடம் புலவர் வருகையை தெரிவித்து ஈழத்துக்கு வழியனுப்பி வைத்தான். ஈழத்தூதவனும் சிங்கை மன்னிடம் வந்து அங்கே நடந்தவைகளையெல்லாம் சாங்கோபாங்கமாக எடுத்துச சொன்னான். ஈழத்தூதுவனும் சிங்கை மன்னனிடம் வந்து அங்கே நடந்தவை களையெல்லாம விபரமாக எடுத்துச்சொல்லிப் புலவர் வருகையைத் தெரிவித்தான்.

புலவர் சில நாட்களால் நல்லூர் சிங்கை மன்னன் சமஸ்தானத்துக்கு வந்து சேர்ந்தார். புலவருக்கு நல்ல வரவேற்பு நடந்தது. அப்பால் நூல் ஆக்கல் ஆரம்பமாயிற்று. மன்னன் மேற்படி அவையைக் கூட்டினான். புலவர் தாம் பாடவேண்டிய வரலாறுகளைத் தம்மிடம் ஒப்படைகக்கும்படியும் தான் பாடித் தருவதாகவும் சொன்னார். அங்கே நூலாக்கும் சர்ச்சை தலைதூக்கியது. நூலின் பெயரென்ன நூலில் சேர்க்கப்படும் விஷயங்களெவை என்பதில் கொஞ்சம் கொஞ்சம் கருத்துவேற்றுமைகள் நிலவியன.


கைலாயநாதன் மேம்படுபொருளாக இருப்பதாலும் அவன் தன்னை ஆட்கொண்ட தெய்வமாக இருப்பதாலும், அவன் கனவில் தோன்றிய நிகழ்ச்சியே ஆகக்கடை நிகழ்ச்சியாக இருப்பதாலும், கைலாயம் சிறந்த மங்களப் பெயராகவிருப்பதாலும் பொருள் நோக்கத்திலும் அது உயர்ந்ததாக இருப்பதாலும், கைலாயநாதன் பெயரோடே புத்தகம் விளங்கினால்தான் அவர் பெயர் என்றும் நிலைபெறவும், அக்கனவு என்றும் நிலைபெறவும், நானும் நன்றிக்குறிப்புச்செய்துவிட்டேன் என்று என்மனம் சாந்தியடையவும் இக்கால வருங்கால நாடும் என் நன்றிக்குறிப்பையும் தெய்வபக்தியையும் மதிக்கவும் ஆண்டவனும் என் நன்றியை நினைக்கவும்கூடும். கைலாயநாதர் வரலாற்றுமாலை என்றே பெயரீடுக என்று மன்னன் சொன்னான்.

ஆம் அரசே! நீங்கள் சொல்பவை அனைத்தும் உண்மைதான். அவைகளை சுருக்கி அப்பொருளிலே கைலாயமாலை என்றே பெயர்வைத்து விடுவோம் என்று புலவர் சொன்னார். எல்லாரும் ஒரேமுகமாக ஆமோதித்தார்கள். சரி அப்பால் பாடும் வரலாற்றை ஒழுங்குபடுத்தித் தாருங்கள் என்று புலவர் வேண்டினார். புவனேகவாதி எழுந்து அரசே, நல்லூர் வரலாறு மாத்திரம் பாடினால் நூல் பூரணமான தல்ல. அது இப்போ நிகழ்ந்த இடைநிகழ்ச்சி. இதற்கு முற்பட நிகழ்ந்த இந்நாட்டு நிகழ்ச்சிகளையும் சேர்த்துப்பாடினால் தான் நூல் பூரணமடையும். நலலூர் வரலாறு பற்றி நாங்கள் நேரடி யாகச் சொல்லுகிறோம். அது எங்கால நிகழ்ச்சி இதற்கு முற்பட நிகழ்ந்த மாருதப்புரவாக வல்லி வரலாறு அவரின் சொந்தக் காரனாகிய மன்னனுக்குத் தெரியும். யாழ்.பாடியின் யாழ்ப்பாண வரலாறு பாண்டி மழவர் சொல் வாா. எனவே நல்லூர் வரலாறு அதனோடு முற்படத் தொடர்புபட்ட செங்கடகநகர் வரலாறும், செங்கடக நகர் வரலாற்றோடு தொடர்புபட்ட கதிரைமலை வரலாறுமே. கதிரைமலைத் தலைந கர்க்கு முன்னும் யாழ்ப்பாணத்தில் மன்னர் ஆட்சியும் மக்களுமிருந்திருக்கிறார்கள். ஆயனும். கதிரைமலைத் தலைநகர் கொண்ட உக்கிரசிங்கனில் இருந்துதான் சொல்லக் கூடிய சான்றுக்கள் இங்குள்ளன. ஆகையால் இந்நூல் உக்கிரசிங்கன் வரலாறு தொடங்கிக் கைலாய நாதா குடமுழுக்குவரை சொல்ல வேண்டும் என்றார்கள். அரசன் அவர்கள் நாட்ட பிமானத்தையும் புத்தி சாதுரியத்தையுமறிந்து சந்தோஷப்பட்டான். உங்கள் விருப்பம் அதுவானால் அவ்வாறு செய்க. ஆயின் கைலாயமாலை என்னும் தலைப்பெயர் மாறக் கூடாது என்றான். நூல்யாப்பு ஆரம்பமாயிற்று. நூலுக்கு வேண்டிய ஆதாரச் சுவடிகளையும் கர்ணபரம்பரைக் கதைகளையும் புவனேகவாகு பாண்டி மழவனும் அங்கிருந்த முதியோர்களும் கொடுத் தார்கள். புலவர் அவைகளை ஆராய்ந்து அடைவுபடுத்திக் குறித்துக் கொண்டார். தூவ யாப்பும் ஆரம்பமாகிப் பலவாரங்கள் சென்றன. அப்பால் ஒருநாள் நூல் நிறைவெய்தியது என்று புலவர் அரசனுக்குத் தெரிவித்தார்.

அரசன் அவையைக் கூட்டினான். அவையிலே புலவர் பிள்ளையாரை வணக்கம்செய்து கலிவெண்பா யாப்பு (310) முன்னூற்றிப்பத்திலே தன் பாடலை வாசித்தரங்கேற்றினார்.

"எந்தைபிரான்....நல்லூர்க் கையிலையில் நாடிவந்து
மேவுமணி யாலயம்புக்கு
ஆதிபரனங்கே யமர்ந்துறைந்து-நீதியுறு
மன்னவரும் சீரும் மனிதர்களும் வாழ்ந்திருக்க
யுன்னியருள் செய்தானுகந்து"

என்று கைலைநாதன் அருளோடு மங்கலமாக நூலை முடித்தார்.





சுவிஸ் அபிவிருத்தி நிறுவனத்தின் உதவித்திட்டத்தின் கீழ் மேற்கொள்ளப்பட்ட யாழ்.கல்வி வலயத்தில் உள்ள 'பாடசாலை வேலைகள் பகுதிக்காக' புனரமைக்கப்பட்ட கட்டடத்தை நேற்று சுவிஸ் அபிவிருத்தி நிறுவனத்தின் பிராந்தியப் பணிப்பாளர் றுடொல்வ் திறந்து வைப்பதனையும், யாழ்.வலயக் கல்விப்பணிப்பாளர் ப.விக்னேஸ்வரன் மங்கள விளக்கேற்றுவதையும் படங்களில் காணலாம்.

(படங்கள்:- ஞா.ஐங்கரன்)

## 1996 இல் காணாமல் போனோர் குறித்த

# ஒன்பது ஆட்கொணர்வு வழக்குகள் யாழ்.நீதிமன்றத்திற்கு மாற்றம்

(யாழ்ப்பாணம்)

கடந்த 1996ஆம் ஆண்டு காலப் பகுதியில் காணாமல்போனோர் தொடர்பான ஆறு ஆட்கொணர்வு வழக்குகள் யாழ்.மேல் நீதிமன்ற நீதிபதி கே.பி.எஸ்.வரதராஜா முன்னிலையில் நேற்று முன் தினம் விசாரணைக்கு எடுத்துக் கொள்ளப்பட்டன.

இவ்வழககுகளில் காணாமற் போனவர்களாக சுண்டுக்குளியைச் சேர்ந்த எஸ.ஏ.வில்ரன், குருநகரைச் சேர்நதவர்களான துரைசிங்கம் குணசேகரம், ஐ.ஆர்.கே.ராஜா, யாழ்.தண்ணீரத தாங்கியடியைச் சேர்ந்த ஏ.ஆர்.க்யூ.ராஜ்குமார், யாழ்.பிரதான வீதியைச் சேர்நத ஜனார்த்தன் ரவீந்திரன், யாழ. மத்தியூஸ் வீதியைச் சேர்ந்த தேவதாஸ் சுரேஸ்குமார் ஆகியோர் குறிப்பிடப்பட்டிருந்தனர்.

இவ்வழக்குகளில் முன்னாள் குருநகர் இராணுவ முகாம் பொறுப்பதிகாரி, யாழ்.512ஆவது பிரிகேடியர், முன்னாள் இராணுவத் தளபதி லயனல் பல்லேகல, சட்டமா அதிபா ஆகியோா எதிர்மனுதாரர்களாகக் குறிப்பிடப்பட்டிருந்தனர்.

மனுதாரர்கள் சார்பில் சடடத்தரணி எம்.றெமீடியசும், எதிர் மனுதாரர்கள் சார்பில் அரச சட்டவாதியும் ஆஜராகித் தத்தமது வாதங்களை முன்வைத்தனர்.

இருபக்க வாதங்களையும் கேட்ட நீதிபதி கே.பி.எஸ்.வரதராஜா, குறித்த மேற்படி வழக்குகளின் எதிர்மனுதாரா களுக்கெதிராக முதற்தோற்றப்பாட்டிலேயே இம்மனுக்கள் மீது விசாரணைகளை நடாத்தக் கூடியதாகத தென்படுவதனால் இவ்வழக்கை விசாரித்து அறிக்கையை சமர்ப்பிக்குமாறு யாழ்ப்பாணம் நீதிவானைப பணித்தார்.

அததுடன், மனுதாரர்களை உரிய தவனைகளில் யாழ். நீதிவான் நீதிமன்றத்தில் விசாரணைகளுக்குச் சமுகமளிக்குமாறும் நீதிபதி கட்டளையிட்டார்.

இதேவேளை, மேற்படி காலப் பகுதியல் யாழ்.மாவட்டத்தில் காணாமர் போனோர் தொடர்பான வேறு மூன்று ஆட்கொணர்வு தொடர்பான வழக்குகள் கடந்த புதன்கிழமை யாழ். மேல்நீதிமன்ற நீதிபதி கே.பி.எஸ். வரதராஜா முன்னிலையில் விசாரணைக்காக எடுத்துக்கொள்ளப்பட்டன.

இவ்வழககுகளில் காணாமற் போனவர்களான அரியாலையைச் சேர்நத செல்லையா பரமநாதன் தொடர்பான வழக்கில குறித்த காலத்தில் அரியாலை இராணுவமுகாம் பொறுப பதிகாரியாகவிருந்த லலித்குமார, முன்னாள் இராணுவத் தளபதி லயனல் பல்லேகல ஆகியோரும், செல்லத்துரைகுமார் தொடர்பான வழக்கில் குறித்த காலத்தில் சின்னகடை இராணுவ முகாம் பொறுப்பதிகாரி, யாழ்.பொலிஸ் நிலையப் பொறுப்பதிகாரி, யாழ்.512 ஆவது பிரிகேடியர், பொலிஸ்மா அதிபர் ஆகியோரும், ஆறுமுகம் சிவாஜினி தொடர்பான வழககில் அரியாலை இராணுவ முகாம் பொறுப்பதிகாரியாகவிருந்த லலித்குமார, முன்னாள் இராணுவத தளபதி லயனல் பல்லேகல ஆகியோரும் எதிர்மனுதாரர்களாகக் குறிப பிடப்பட்டிருந்தனர்.

இவ்வழககுகள் தொடர்பாக சமர்ப்பணங்களை மனுதாரர்களின் சார்பில் மனித உரிமைக்கும், அபிவிருத்திக்குமான நிலைய சட்டத்தரணி எம்.றெமீடியகம், அரச தரப்பில் அரச சட்டவாதியும் சமர்ப்பித்ததையடுத்து குறித்த வழக்குகளில் எதிர்மனுதாரர் களுக்கெதிராக முதல் தோற்றப்பாட்டிலேயே இமமனு மீதான விசாரணைகளை நடாத்தக்கூடியதாக தென்படுவதனால் இவ்வழக்கை விசாரித்து அறிக்கையை சமாப் பிக்குமாறு நீதிபதி கே.பி.எஸ்.வரதராஜா, யாழ்ப்பாணம நீதி வானைப் பணித்தார்.

அத்துடன், மனுதாரர்களை உரிய தவணைகளில் யாழ். நீதிவான நீதிமன்றத்தில் விசாரணைகளுக்குச் சமுகமளிக் குமாறும் நீதிபதி கட்டளையிட்டுள்ளார். (ரு-19)

# நிலக்கரி சுரங்க விபத்தில் சிக்கி உக்ரேனில் 13 பேர் பலியாயினர்

(பலிகீவ்)

உக்ரேன் நாட்டின் கிழக்குப் பகுதியில் உள்ள டான்பாஸ் நிலக்கரி சுரங்கத்தில் ஏற்பட்ட வெடிவிபத்தில் சிக்கி 13பேர் பலியாயினர்.

சீனாவைப் போல உக்ரேன் நாட்டிலும் அடிக்கடி சுரங்க விபத்துக்கள் ஏற்படுவது சகஜம். கடந்த ஆண்டு இங்குள்ள நிலக்கரி சுரங்க விபத்துக்களில் சிக்கி 250க்கும் அதிகமானவர்கள் பலியாயினர்.

இதற்கிடையே நேற்றுமுன்தினம் டுனெட்ஸ்க் பகுதியில் உக்லிதார் என்ற இடத்தில் உள்ள டான்பாஸ் நிலக்கரி சுரங்கத்தில் 28 பேர் வேலைசெய்து கொண்டிருந்தனர்.

திடீரென சுரங்கத்தில் ஏற்பட்ட வெடிவிபத்தில் சிக்கி 13 பேர் பலியாயினர். 15 பேர் பாதுகாப்பாக மீட்கப்பட்டுவிட்டனர். கடந்த ஜுலை மாதம் இதேபகுதியில் ஏற்பட்ட சுரங்க விபத்தில் 30பேர் பலியாயினர் என்பது குறிப்பிடத்தக்கது.

இதனையடுத்து அவ்வப்போது இடம்பெறும் சுரங்க விபத்துக்களைக் கட்டுப்படுத்தும் நோக்கில் உக்ரேன் அரசு சுரங்கத் தொழில் மீதான சில இறுக்கமான நடைமுறைகளை அமுல்படுத்த நடவடிக்கை மேற்கொண்டிருப்பதுடன்,

இதுவரை காலமும் ஏற்பட்ட சுரங்க விபத்துக்களில் பாதிக்கப்பட்டவர்களுக்கு நிவாரணங்களை வழங்கவும் திட்டமிட்டுள்ளது. (ப)



பலகோடி மரங்களை நட்டு பசுமைப்புரட்சி ஏற்படுத்தியதற்காக கென்யாவைச் சேர்ந்த வங்காரி மாத்தாய் நோபல் பரிசுக்குத் தேர்வுசெய்யப்பட்டார். நோர்வே நாட்டிலுள்ள ஒஸ்லோ நகரில் நடக்கும் பரிசளிப்பு விழாவிற்கு வந்த மாத்தாய்க்கு உற்சாக வரவேற்பு அளிக்கப்பட்டது.




அமெரிக்காவிலுள்ள லாஸ்வேகாஸ் நகரில் 2004ஆம் ஆண்டிற்கான பில்போர்ட் மியு,சிக விருதுவிழா நடைபெற்றது. அதில் கலந்து கொண்ட பிரபல பொப் பாடகியும், கவர்ச்சிக் கன்னியுமான பிரிட்னி ஸ்பியர்ஸ் தனது சிறிய நாய்க்குட்டியைக் கார்பெட்டில் நடக்கவிட்ட காட்சிதான் இது.

# உலகில் உயர்ந்த கட்டடம் துபாயில் அமைக்க திட்டம்

(சியோல்)

உலகிலேயே மிக உயரமான கட்டடத்தை துபாயில் சாம்சங் கார்ப்பொரேஷன் நிறுவனம் கட்டவுள்ளது.

இதற்கான கட்டுமானப் பணிகள் அடுத்த ஆண்டு ஜனவரியில் தொடங்க உள்ளதாக சாமசங் நிறுவனததின் அதிகாரி ஒருவர் தெரிவித்தார்.

கட்டுமானப் பணிகளுக்கான ஒப்பந்தத்தை தென்கொரிய நிறுவனம் பெறறுள்ளது. சுமார் 45கோடி ரூபா செலவில உருவாகும் இந்தக் கட்டடத்தின் உயரம் 800 மீற்றர். 160 மாடிகள் கொண்ட இந்தக் கட்டடத்தின் மொத்தப் பரப்பளவு 5 லட்சம் சதுர அடியாக இருக்கும். ஹோட்டல்கள், வணிக நிறுவனங்கள், அலுவலகங்கள், குடியிருப்புகள் என அனைத்து வசதிகளும் இதில் செய்யப்படவுள்ளன. இது 2008ஆம் ஆண்டு நவம்பரில் கட்டிமுடிக்கத் திட்டமிடப்பட்டுள்ளது. (ப)

# சோனியா காந்தியினது 58ஆவது பிறந்தநாள்



(புதுடில்லி)

காங்கிரஸ் தலைவர் சோனியாவின் 58ஆவது பிறநதநாளை நேற்றுமுன்தினம உற்சாகமாகக் கொண்டாடினர்.

பிரதமர் மன்மோகன் சிங், நிதியமைச்சர் சிதம்பரம் உட்பட மத்திய அமைச்சர்கள் பலரும் சோனியாவின் வீட்டிற்குச் சென்று வாழ்த்துத் தெரிவித்தனர்.

காங்கிரஸ் ஆளும் மாநில முதல்வர்களும் திரளாக வந்து சோனியாவிற்குப் பிறந்தநாள் வாழ்த்துத் தொிவித்தனர்.

இதுதவிர ஏராளமான கட்சித் தொண்டர்கள் சோனியாவின இல்லததிற்கு வெளியே கூடி தமிழகத்தின் புகழ் பெற்ற ஆட்டமான பொய்க்கால் குதிரை உட்பட பல நாட்டுப்புற நடனங்கள் ஆடி கட்சித் தலைவரின் பிறந்த நாளைக் கொண்டாடினர். (ப)




கொடைக்கானல் ஏரியில் படகுச சவாரிசெய்ய முயன்ற கவர்னர் பர்னாலா படகிற்குள் அமர சிரமபபட்டார். ஷ" வழுக்கித் தடுமாறிச் சாய்ந்து விழுந்துவிட்டார்.

# உலகளாவிய ரீதியில் ஆண்டுதோறும் 50லட்சம் குழந்தைகள் பட்டினிச் சாவு!

## ஐ.நா. அமைப்பு அதிர்ச்சித் தகவல்

(நியூயோர்க்)

உலகளாவியரீதியில் ஊட்டச்சத்துக் குறைவு மற்றும் பட்டினிக் கொடுமையால் இறக்கும் குழந்தைகளின் எணணிக்கை ஆண்டுதோறும் 50 லட்சத்துக்கும் அதிகமாகவுள்ளது.

இத்தகவலை ஐ.நா. உணவு மற்றும் விவசாயக் கழகம் அறிக்கை மூலம் வெளியிட்டுள்ளது.

இந்தப் பிரச்சினையால் வளரும் நாடுகளே அதிகம் பாதிக்கப்படுகின்றன. ஊட்டச்சத்துப் பற்றாக்குறைமிக்க குழந்தைகளால் தேசிய உற்பத்தித்திறனும் வருவாய் இழப்பும் ஏற்படுகின்றன. இதனால் ஆயிரக்கணக்கான கோடி ரூபாய் அளவுக்கு நஷ்டம் ஏற்படுகிறது. வளரும நாடுகளில் ஆண்டுதோறும்எடை குறைவாகப் பிறக்கும் குழந்தைகளின் எண்ணிக்கை 2கோடியாக உள்ளது. இதில் சிலர் பிறந்த சில நாட்களிலேயே இறந்துவிடுகின்றனர். இந்தக் குறைபாடுகளிலிருந்து காப்பாற்றப்பட்டு வளரும் குழந்தைகள் ஊட்டச்சத்துக் குறைவு பாதிப்பினால் தங்கள் வாழ்நாள் முழுவதும் உடல்ரீதியாகவும், மனரீதியாகவும் பாதிக்கப்படுகின்றனர்.

2000, 2002ஆம் ஆண்டுப் புள்ளிவிபரப்படி உலகம் முழுவதும் 82 கோடி குழந்தைகள் ஊட்டச்சத்துக் குறைவினால் பாதிக்கப்பட்டுள்ளனர்.

இதில் வளரும் நாடுகளில மட்டும் 80 கோடிக்கும் அதிகமான குழந்தைகள் உளளனர். இநதியாவில் மட்டும் 1.8 கோடி குழந்தைகள் ஊட்டச்சத்துக் குறைவினால் பாதிக்கப்பட்டுள்ளனர் என்றும் ஆய்வு அறிக்கை தெரிவிக்கிறது . (ப)

# நேபாளத்தில் குண்டுவெடிப்பு

(காத்மண்டு)

நேபாளத்தில் அரசு கட்டடம ஒன்றில் சக்திவாய்ந்த குண்டு வெடித்தது. இதில் உயிர்ச்சேதம் எதுவும் ஏற்படவில்லை என்றாலும் கட்டடம் பலத்த சேதம் அடைந்தது.

நேபாளத் தலைநகர் காத்மண்டுவல் அரசுக்குச் சொந்தமான விவசாயக் கம்பெனி ஒன்றுள்ளது. காலை கம்பெனி தொடங்குவதற்கு முன் இரண்டு இளைஞர்கள் அத்துமீறி உள்ளே நுழைந்தனர். சக்திவாய்ந்த வெடிகுண்டுகளைப் பதுக்கிவைத்துவிட்டு வெளியே வந்த அவர்கள், போகும்போது காவலாளிகளிடம் தாங்கள் மாவோயிஸ்ட் தீவிரவாதிகள் எனக் கூறிவிட்டுச் சென்றுள்ளனர்.

அவர்கள் அந்த இடத்தைவிட்டு நகர்ந்த மூன்று நிமிடத்தில் கட்டடத்தில பயங்கர வெடிகுண்டு வெடித்தது. இதில் கடடடம் பலத்த சேதமடைநதது. ஆனால உயிர்ச்சேகம் எகுவமில்லை. (ப)

# பாவலர் சமூக மேம்பாட்டின் காவலர்

## திறனாய்வுக்களம்

**பவளமல்லி**
**மகாஜனாக் கல்லூரி நிறுவுனர் பாவலர் துரையப்பாபிள்ளையின் 75 ஆம் ஆண்டு நினைவேடு**

குடியேற்ற நாட்டாதிக்க காலத்துச் சுயபண்பாட்டு விழிப்புணர்வு மையங்களாய் யாழ்ப்




பாணத்தில் தோன்றிய நிறுவனங்களுள் தனித்துவமாய் நிமிர்ந்தது தெல்லிப்பழை மகாஜனக்கல்லூரி. மகாஜனக் கல்லூரியைத் தொடக்கி இந்தப் பண்பாட்டுணர்வுககுச் செயல்வடிவம் தந்த மிகப் பெரிய ஆளுமை பாவலர் தெ. அ.துரையப்பாபிள்ளை பாவலராய், சமூகமேம்பாட்டின் காவலராய், உயர்ந்த கல்வியாளராய வரலாறு எமக்களித்த பாவலர் மறைந்த 75 ஆவது பவள விழா நினைவுகளை எழுதும் மலர் தான் **பவளமல்லி**.

சென்ற நூற்றாண்டில் எங்கள் சமூகம் எதிர்கொண்ட நெருக்கடிகளிடையே சிதறுண்டு போனவை பல; இருத்தலுக்கான ஓட்டத்தில் தேசத்தின் உள்ளேயும் வெளியேயும் இடம பெயர்ந்து, புலம் பெயர்ந்து போனவர் பலபேர் இந்தப் பெயர்விடையே எங்கள் பண்பாட்டு மையமான மகாஜனக் கல்லூரியும் தப்பமுடிந்ததில லை. அலைவுகள் முடித்து இன்று மீளக்குடியேறிய போதும் அதன சூழல் முள்வேலிகள் இண்ணும் நீங்கியபாடில்லை இருள்சூழ்ந்த இந்தக்கால நெருக்கடிகளிடையில் எங்கள் நம்பிக்கைகளை காக்கின்ற, வேர்களை மீளக்காணவும், விழுதுகளை நேராக்கவும் உள்ளும் வெளியேயும் எம்மவர்கள் செய்கின்ற காலப் பணியின் கனிவு தான் **பவளமல்லி**.

சுயம்தொலைந்தது உலகமயமானது என்கின்ற திட்டமிட்ட நெருக்கீடுகளிடையே தம்மை அறிவித்த, தம் சுயத்தைக் கட்டியெழுப்பிய தேசத்துக் கல்விச்சாலையை நினைவுகூறவும், தேசத்தின் முன்னோடியாய், சுயபண்பாட்டின் விழிப்புணர்வை எமதாக்கிய மகாஜனக்கல்லூரியின் தந்தையின் 75 ஆவது நினைவைப் போற்றவும் கல்விசார் மலர் ஒன்றை ஆக்கத் துணிந்த, பிரான்ஸில் மையம் கொண்ட மகாஜனக் கல்லூரி பழைய மாணவர் சங்கத்தினர் நம பராட்டுக்குரியவர்கள்.

பவளமல்லியின் குவி மையமாக அமைவது கல்வி. அதுவும் மேம்பட்ட கல்வி; மரபின் தளதநில் வேர்விட்டபடி, பண்பாட்டினை மேம்பட்ட பண்பாடாக்குதலை இலக்காகக் கொண்ட கல்வி. இதுதான் பலளமல்லியின் கால முக்கியத்துவமும் சிறப்புமாகும்.

பாவலர் துரையப்பாபிள்ளையின் சிந்தனைகள், வாழ்வியல் இலக்குகள், சுயவிழிப்பின் அத்திவாரமாக அவர் கண்ட கல்விசார் சிந்தனைகள், ஆகக இலக்கியப் படைப்புகள் சிலையென பவளமல்லியின் உள்ளடக்கம் அமைந்திருககிறது. மகாஜனாவோடு நேரடியான உறவுபூண்டவர்களும் ஏனைய சமூகசிந்தனையாளரும் தம் ஆக்கங்களின் மூலம பவளமல்லியின் நறுமணத்தினை உலகளாவியதாக்கியிருக்கின்றனர்.

தமது இலக்கினுக்கு ஏற்ப ஆக்கங்களைப் பெறுவதிலும் நேர்ந்த சிரமங்கள், மட்டுப்பாடுகள் பற்றித் தொகுப்புரையில் குறிப்பிடப்பட்ட போதும் கிடைத்த ஆக்கங்களை ஒழுங்கமைத்த விதமும் அந்த ஆக்கங்களுக்குள்ள உள்ளார்ந்த வீச்சும் எல்லையில்லா மகிழ்ச்சியைத் தருகின்றன.

'இழந்து போன சொர்க்கம்' என்பதாய் அன்றைய மகாஜனக் கல்விகுல நினைவுளை மீட்கும் கட்டுரைகளில் இருந்து 'இனிக்கட்டியெழுப்பவேண்டிய சொர்க்கம்' பற்றிய விழிப்புணர்வுக் கட்டுரைகள் வரை இந்த ஆக்கங்களின் வீச்செல்லையைக் காணமுடிகிறது.

சமூகம் பற்றிய சிந்தனையிடையேயும் பாவலர் கவிதை முதல் ிராயேஸ்வரியின் சிறுகதை வரை நாம் வேண்டி நிறகும் மேம்பட்ட சமூகத்தின் பண்பாட்டின் வெளிச்சத்தைக் காண முடிகிறது.

எடுத்துக்காட்டாக சாதிய வழக்கத்தின் ஆபத்தினைச் சுட்டும் பாவலரின் அந்நாள் கவிதை இன்றுவரை அர்த்த முள்ளது.

**''ஒவ்வொரு வீட்டினுக்**
**கொவ்வொரு சாதியாய்**
**ஊரிற் பிரிவினை மெத்தி**
**டுங்கால்**
**செவ்வை யுறுமைக்ய சந்**
**தோச மெங்களைச்**
**சேருத லெங்ஙனம் சங்க**
**மின்னே''**

பாவலரின் சாதிய விழிப் பாடலைப் போலவே 'காங்கிரீட்டாகிபபோன' ஆணாதிக்க நிலையினை ராஜேஸ்வரியின் சிறுகதை சுட்டுகின்றது.

கட்டுரைகள் பலவும் எதிர்காலத்துவ சமுதாயத்துக்கான கட்டுரைகளாக விளங்குகின்றமை குறிப்பிடத்தக்கது. வெறும் ஆராய்ச்சிச் சிந்தனைகள் என்பதற்கு அப்பாற்பட்டறிவின் பிரதிபலிப்புகளாய் அவை பெரும் பாலும் அமைந்துள்ளமையும் கவனத்திற்குரியதாகும்.

''உன்னதமான சமுதாயத்தினை உருவாக்குதல் தான் கல்வியின் உச்ச நோக்கம்; அதற்கு மாணவனைச் சமுதாயத்திற்குப் பொறுத்தப்பாடுடையவனாக்க வேண்டும்'' எனும் கல்வி இலக்கு இன்றைய எமது சமயப் பண்பாட்டுச் சூழ்லமைவில் பொருந்தமாகுமா? என்று கேள்வி எழுப்பும் சைவப் புலவர் சு.செல்லத்துரை 'சுயம்' பற்றிய விழிப்பை நேரிய சமூக மேம்பாட்டைப் பதிலாகக் கேட்டு நிற்பார்.

நெடுநாள் ஆசிரிய, கல்வி நிர்வாக அனுபவசாரமாக மகாஜனா முன்னாள் அதிபர் பொ.கனக சபாபதி அவர்களது கல்வி பற்றிய கட்டுரை, இன்றைய கல்வி நிறுவனத்தின் நிலைகுலைவை கல்வியின் அரசியல் நோக்கில் ஆழமாகவே ஆராய்கின்றது.

இதனைவிடப் புலம் பெயர் நாடுகளில் தமிழ் மொழிக் கல்வி, பண்பாட்டுக் கல்வி பற்றிய நிலைமைகளைக் குரு அரவிந்தன் சுமந்திரி பிரான்ஸ் போன்றோரின் கட்டுரைகள் விரிவாக விளக்குகின்றன.

மனதைத் தொட்டு, சிந்தையில் பெறிதட்டும் கவனத்திற்குரிய கட்டுரையான க.வாசுதேவனின் 'கந்தன் மணியோசையில...' பற்றிக் குறிப்பிட்டே ஆக வேண்டும். அழகிய தௌிந்த சிந்தை மொழி நடையில் பிரதிபலிக்க எங்கள் சமூக வரலாறறின் பண்பாட்டின் அபத்தமான பக்கங்கள் இக்கட்டுரையில் சிறப்பாக உணர்த்தப்படுகின்றன.

மேலே சுட்டிய ஆக்கங்கள் வகைமாதிரிகள் தான்; இடம் பெற்ற அனைதது ஆக்கங்களுமே ஏதோ ஒரு வகையில் அறிவியல் - சமூக முக்கியத்துவம் கொண்டவைதான பெட்டி கட்டி இடம் நிரப்பிகளாக வந்த அறிஞர் குறிப்புகளுக்குள்ளேயே நிறைந்த சங்கதிகள்; எதிர்காலத் தேடலுக்கான பொக்கிஷங்கள்! இந்த அழகான, அறிவான பவளமல்லியின் தோற்றத்துக்குக் காரணமாய் அமைந்த பிரான்ஸ்ஸு மகாஜன பழைய மாணவர் சங்கத்தனரதும் சிறப்பாக தொகுப்பாசிரியரதும் பணிக்கு அறிவுலகம் என்றென்றும் கடமைப்பட்டது.

மகாஜன உலகப் பழைய மாணவர்கள், மகாஜன எழுத்தாளர் ஆக்கங்களைத் தொகுத்து வெளியிடும் முயற்சியில் ஈடுபட்டு வருவது குறித்தும் மிகுந்த மகிழ்ச்சி அடைகின்றோம்; பாராட்டுகிறோம்.

பவளமல்லி வாசத்தில் எங்கள் பண்பாட்டின் மேன்மையைக் காண்போம். □

**பேராசிரியர் என்.சண்முகலிங்கன்**
**தலைவர்**
**(அரச, அரசறிவியல்சமூகவியல் துறை)**
**யாழ்.பல்கலைக்கழகம்**

## தாக்குதலில் இளைஞன் படுகாயம்

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாணம் முலவைச் சந்திப பகுதியில் வைத்து இனந் தெரியாதோரின் தாக்குதலுக்கு இலக்காகி அதே இடத்தைச் சேர்ந்த இளைஞன் ஒருவன் காலில் படுகாயமடைந்து மயக்க முற்ற நிலையில் யாழ்.போதனா வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளார்.

நேற்று முன்தினம் இரவு 10.00 மணியளவில் இடம்பெற்ற இச் சம்பவத்தில் அதே இடத்தைச் சேர்ந்த மதன் (வயது 18) என்பவரே காயமடைந்தவராவார். (ச-4,8)

## மின்விளக்கு ஒளிரவில்லை

(காரைநகர்)

காரைநகர் வாரிவளவு பிரதான வீதிகளில் பொருந்தப்பட்ட மின் குமிழ்கள் ஒளிராததன் காரணமாக இவ் வீதிப்பகுதி இருளில் மூழ்கியுள்ளது.

இம் மின்குமிழ்கள் ஒளிராதமை தொடர்பாக நேரடியாக மின்சார சபை உத்தியோகத்தர்களுக்கு தெரிவித்து பல மாதங்களாகியும் இவை திருத்தப்படவில்லை இதனால் இவ் வீதியினால் இரவு வேளை பயணிக்க மக்கள் அச்சம் தெரிவிக்கின்றனர். (ப-246)

## வீடியோப் படக்காட்ச'

யாழ்.பல்கலைக்கழக திரைப்பட வட்டத்தின் ஏற்பாட்டில் நாளை ஞாயிற்றுக் கிழமை காலை 10.00 மணிக்கு புவியியற்றுறை மண்டபத்தில் 'ஹவுஸ் ஒப் பேனாடா அல்பா' (**House of Bernarda Alba**) எனும் ஸ்பானிய மொழித் திரைப்படம் ஆங்கிலத துணைத் தலைப்புக்களுடன் காண்பிக்கப்படவுள்ளது.

'காசியா லோகா' எனும் புகழ் மிக்க ஸபானிய நாடகாசிரியரின் நாடகத்தைத் தழுவி உருவாக்கப்பட்ட இத் திரைப்படம், பல சர்வதேச விருதுகளைப் பெற்றமை குறிப்பிடத்தக்கது.

கடற்காட்சியின் இறுதியில் எழுத்தாளர்கள் அ.யேசுராசா, க.சடடநாதன் ஆகியோரின் நெறியாள்கையின் கீழ் கலந்துரையாடல் ஒன்றும் இடம்பெறும். ஆர்வலர்கள் எவரும் இந் நிகழ்வுக்கு வருகைதந்து பயன் பெற முடியும் என ஏற்பாட்டாளர்கள் தெரிவித்துள்ளனர். (ற)

## பாலம் சேதம்

சண்டிலிப்பாய்ச் சந்தியில் இருந்து மானிப்பாய் நோக்கிச் செல்லும் பிரதான வீதியில் உள்ள கட்டுடைப்பாலம் சேதமடைந்துவிட்டது.

இதனால இவ் வீதியால் பயணிப்போர் பெரும் சிரமங்களை எதிர்நோக்குகின்றனர். (ப-58,9)

## பாரதியே! உனை மறவோம்

**மகாகவி பாரதியாரின் பிறந்ததினம் இன்று**

எங்கே இனிக் காண்போம்
இவன் போல் ஒருகவியை
வெங்கொடுமை சாக்காட்டில்
வீழ்ந்து விட்ட தமிழினத்தை
தங்கத் தமிழ்ப் பாட்டால்
தட்டி மிக எழுப்பியவன்
சிங்கமெனக் கர்ச்சித்து
சீரடிமை தளையறுத்து
வங்கக் கடல் அலைபோல்
வாரிக் கவி இறைத்தான்
பொங்கு தமிழ் உணர்வை
பூதலத்துக் கீந்த இவன்
சங்கே முழங்கு என
சமர் செய்த மாவீரன்
தங்கமகன் தனையிழந்து
தமிழ்த்தாய் அலறுகையில்
இங்கிவனை நாம் நினைந்து
இறுமாப்புக் கொண்டிடுவோம்
தங்கும் கதிர் ஒளியும்
தாரகைகள் உள்ள மட்டும்
எங்கள் மனத் திரையில்
என்றுமிவன் வீற்றிருப்பான்

வீகடகவி

## எஸ்.பி. சபைக்கு வரவிடவேண்டும் என்ற சபாநாயகரின் வேண்டுகோளை புறக்கணித்தார் சிறை ஆணையாளர்

(கொழும்பு)

பாராளுமன்ற உறுப்பினரான எஸ்.பி.திஸநாயக்கவை பாராளுமன்றம் செல்வதற்கு அனுமதிக்குமாறு சபாநாயகர் விடுத்த கோரிக்கைக்கு மதிப்பளித்த அவரை விடுவிக்காததையிட்டு சிறைச்சாலை ஆணையாளர் ருமி மஸ்றூக்கை பாராளுமன்ற சிறப்புரிமைகள் குழுவின் முன் சமூகமளிக்குமாறு கோருவதென ஐ.தே.க.பாராளுமன்றக் குழு தீர்மானித்துள்ளது.

சட்டமா அதிபரின் அனுமதியைப் பெறாமல் தன்னால் திஸநாயககவை பாராளுமன்றம் செல்லுவதற்கு அனுமதிக்க முடியாது என்று கூறிச் சிறைச்சாலை ஆணையாளர் அதற்கு மறுத்துவிட்டார். கட்சித் தலைவர்களின் கூட்டத்தில் எடுக்கப்பட்ட தீர்மானத்தின் பெயரிலேயே சபாநாயகர் கோரிக்கையை விடுத்திருந்தார்.

இதேவேளை, திசாநாயக்க அரசியற் காரணங்களுக்காகவே சிறையிலிடப்பட்டிருக்கிறார். அவர் இன்று ஒரு அரசியற் கைதி சுதந்திரமுன்னணி அரசாங்கம் அரசியற்சட்டத்திற்கு முரணான வகையில அரசியல் எதிரிகளை பழிவாங்கும் வகையில் செயற்பட்டுள்ளது என்று ஐ.தே.க.தெரிவிக்கிறது. இவ்விடயம் பற்றி எடுக்கப்படவேண்டிய நடவடிக்கைகள் பற்றி முடிவுசெய்ய ராஜித சேனாரத்ன, மஹிந்த விஜய சேகர ஆகிய எம்.பிக்கள் கட்சியினால் நியமிக்கப்பட்டுள்ளனர்.

அரசின் நடவடிக்கைக்கு எதிராக டிசம்பர் 21 ஆம் திகதி கொழும்பில் பாரிய எதிர்ப்பும் ஆர்பபாட்டம் ஒன்று ஏற்பாடு செயயப்பட்டு வருகிறது. கொழும்பிலுள்ள வெளிநாடுகளின் தூதரகங்களுக்கும் இவ்விடயம் பற்றி எடுத்து விளக்குவதற்கும் குழு தீர்மானித்துள்ளது. (த-6)

## அடிக்கல் நாட்டல்

(பருத்தித்துறை)

பரந்தாமன் ஆச்சிரமத்திற்கான கட்டட அடிக்கல் நாட்டு விழா நாளை ஞாயிற்றுக்கிழமை நன்பகல் 12.00 மணிக்கு கி.ஜெயகுமார் தலைமையில் நடைபெறவுள்ளது.

இந் நிகழ்வில் பிரதம விருந்தினர்களான வல்லிபுர ஆழ்வார் கோயில் அறங்காவலர் சபைத் தலைவர் இ.அன்னலிங்கம் மற்றும் யாழ்.மாவட்டப் பாராளுமன்ற உறுப்பினர்களான க.சிவாஜிலிங்கம், செ.கஜேந்திரன், க.சிவனேசன் ஆகியோர் கலந்து கொள்ளவுள்ளார்கள். (ப-101)

மன்னர்க்கு மன்னுதல் செங்கோன்மை அஃதின்றேல்
மன்னாவாம் மன்னர்க் கொளி - குறள்

வலம்புரி

# கொடுங்கோல் ஆட்சியில் செங்கோலுக்கு ஆபத்தே!

ஓடி விளையாடு பாப்பா... இது பாரதியார் பாடல். இப்போது இலங்கைப் பாராளுமன்றத்தில் பாப்பாக்கள் ஓடிவிளையாடுகின்றார்கள். கூடவே ஒளித்தும் விளையாடுகின்றார்கள். நாடாளுமன்றத்தில் இப்படி அமளி துமளி என்றால் ஆட்சி எப்படியிருக்கும் என்பதற்கு பொழிப்புரை தேவையில்லை.

சமாதான சூழ்நிலையை ஆணிவேரோடு அறுக்கும் அகழான் ஜே.வி.பி. என்ற பேரில், பாராளுமன்றத்தில் குடிபுகுந்துள்ளது. இவ்வாறு கொடுங்கோலாட்சியாளர்கள் இருக்கின்ற இடத்தில் செங்கோல் இருப்பது நியாயமானதல்லவே. செங்கோல் என்றால் என்ன? என்பதன் பொருள் தெரியாதவர்கள் வெறும் தடியாக அதனைக் கருதுகின்றனர். இதனால் அதற்குரிய மதிப்பை செலுத்தத் தவறிவிடுகின்றனர்.

இதில் விசித்திரம் என்னவெனில் செங்கோலில் இருந்த இரத்தினக் கற்கள் மாயமாக மறைந்து போனமையாகும். காலஞ்சென்ற முன்னாள் ஜனாதிபதி பிரேமதாஸாவின் காலத்தில் ஜனாதிபதி மாளிகையில் இருந்த தங்கச் சிலைகள் களவுபோன இந்த நாட்டில், செங்கோலில் இருக்கக்கூடிய இரத்தினக் கற்கள் மாயமாக மறைந்தது அதிசயமான நிகழ்வன்று.

இவ்வாறு விரும்பத்தகாத நிகழ்வுகள், குழப்பங்கள் பாராளுமன்றத்தில் நடைபெறுவதன் தாற்பரியம் என்ன? என்பது பற்றி ஆராய்ந்தால் அதன் அடிப்படை இனப்பிரச்சினையாகவே இருக்கும்.

சிங்கள அரசுகள் தமிழர்களின் பிரச்சினைகளை அமுக்கி, அடக்கிவிட நினைத்ததன் காரணமாக இன்று பாராளுமன்றமே குழம்பிப்போய் சந்தையாக காட்சியளிக்கின்றது.

ஒரு காலத்தில் தமிழ்ப் பாராளுமன்ற உறுப்பினர்களை பேசுவதற்கே அனுமதியளிக்க மறுத்த அதே சபையில் இன்று தமிழ்க் கூட்டமைப்பு பாராளுமன்ற உறுப்பினர்கள் பலத்தோடு - துணிவோடு எழுந்து நின்று கோஷம் போடுகின்றதெனில் அது சிங்களவர்கள் நினைத்தும் பாராத ஒரு விடயமாகவே இருக்கும். இதற்கெல்லாம் மூல காரணம் விடுதலைப் புலிகளின் போராட்டத்தின் வீரியமாகும்.

விடுதலைப் புலிகளின் சுதந்திரப் போராட்டத்தை தோற்கடித்துவிட முடியும் என்ற நம்பிக்கையில் ஜே.வி.பியினர் பகற்கனவு காண்கின்றனர். சுமார் 20 வருடகால யுத்தம், அதற்கு இருக்கக்கூடிய சுதந்திர வேட்கை - உயிர்த்தியாகம் - அர்ப்பணிப்பு இவ்வாறு மனித வலுவைக் கடந்த தியாகத்தின் உச்சத்தை ஓர் ஊதாரிக் கட்சி குலைத்துவிட நினைக்குமாயின் அதைவிட மடமைத்தனம் வேறு எதுவுமாக இருக்கமுடியாது. இலட்சியத்துடன் உலகில் போராடிய எந்த விடுதலை அமைப்புக்களுமே தோற்றதாக வரலாறு இல்லை. இதனை ஜனாதிபரி சந்திரிகா குமாரதுங்க உள்ளிட்ட ஜே.வி.பியினர் உணர்ந்துகொள்ளவேண்டும். ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்கவைப் பொறுத்தவரை தமிழர்களின் பிரச்சினை என்பது அவருக்கு ஓர் சாதாரண விடயமாக இருக்கலாம்.

ஆனால், விடுதலைப் புலிகளையும், தமிழ் மக்களையும் பொறுத்தவரையில் தமது பிரச்சினைக்கு ஓர் முடிபு வேண்டும். அந்த முடிபு தமிழ் மக்கள் மீண்டும் ஒருமுறை சிங்கள இனவாதிகளால் ஏமாற்றப்படாமல் தமது இறைமையுடன் சுதந்திரக் காற்றை சுவாசிக்கக்கூடிய வாழ்வை தருவதாக இருக்க வேண்டும்.

இதற்கு ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்காவோ அன்றி இனவாத சிங்கள ஆட்சியாளர்களோ விரும்பவில்லையாயின் மீண்டும் ஓர் போர் மூள்வது தவிர்க்க முடியாததாகிவிடும்.

விடுதலைப் புலிகளை பொறுத்தவரை அவர்கள் படைப்பலத்தில் குறைந்தவர்கள் அல்ல. அவர்களின் சமாதான சமிக்ஞையை, பேச்சுக்களில் கலந்து கொண்டமை, யுத்தநிறுத்தத்தை கடைப்பிடிக்கின்றமை போன்ற விடயங்களை வைத்துக்கொண்டு விடுதலைப் புலிகள் பலவீனப்பட்டு விட்டார்கள் என்ற நினைப்பை அரசு கொண்டிருக்குமாயின் முடிபு யுத்தமென்பதாகவே இருக்கும்.

# யுத்த நடவடிக்கை மற்றும் வறுமை காரணமாக வட-கிழக்கில் சிறுவர்கள் பெரிதும் பாதிப்பு

## யுனிசெப் வதிவிடப் பிரதிநிதி சுட்டிக்காட்டு

(கொழும்பு)

இலங்கையின் வடக்கு-கிழக்குப் பகுதிகளில் வாழும் சிறுவர்கள் வறுமையின் நிமித்தம் மாற்றுவழி எதுவுமில்லாததால் விடுதலைப் புலிகள் அமைப்பில் தாமாகவே இணையும் சாத்தியம் இன்னமும் உள்ளதாக ஐக்கிய நாடுகள் சிறுவர் பாதுகாப்பு நிதியத்தின் இலங்கைக்கான வதிவிடப் பிரதிநிதி டெட்சலிபன் தெரிவித்துள்ளார்.

உலக சிறுவர்களின் நிலைகுறித்த 2004ஆம் ஆண்டிற்கான அறிக்கையை நேற்று முன்தினம் கொழும்பில் வெளியிட்டு வைத்து உரையாற்றும் போதே அவர் இவ்வாறு குறிப்பிட்டார்.

அவர் அங்கு மேலும் கருத்துத் தெரிவிக்கையில் வடக்கு-கிழக்கில் யுத்த நடவடிக்கைகளும் வறுமையும் இணைந்து சிறுவர்களின் அனைத்து உரிமைகளையும் பாதித்துள்ளன. இதுவே சிறுவர் உரிமை மீறல்களுக்கு வழிவகுக்கின்றன.

வடக்கு-கிழக்கில் வறுமையில் வாடும் சிறுவர்கள் தாமாகவே முன்வந்து விடுதலைப் புலிகள் அமைப்பில் இணையும் சாத்தியமுள்ளது. இதற்கு அவர்களுக்கு வேறு வழி இல்லாததே காரணமாகும். நாட்டில் தொடர்ந்தும் நிலவி வரும் ஸ்திரத்தன்மையும் சமாதானத்தின் மீதான நம்பிக்கையீனமுமே சிறுவர்கள் பலவந்தமாகப் படையணியில் சேர்க்கப்படுவதற்கான காரணிகளாகக் காணபபடுகின்றன.

இலங்கை சிறுவர்களுக்கு ஆபத்தான இடமாக மாறக் கூடாது. அதற்கு முதலில் நாட்டில் நிலையான, நிரந்தரமான சமாதானத்தைக் கொண்டுவரவேண்டும்.

கடந்த இருதசாப்த காலமாக இடம்பெற்ற மோதல்களுக்கு செலவிடப்பட்ட பணத்தை சிறுவர்களின் கல்விக்கும் சமூக அபிவிருத்திக்கும் செலவிட்டிருந்தால் மலேசியா, சிங்கப்பூர் போல இலங்கை வளர்ச்சியடைந்திருக்கும்.

இலங்கையில் இடம்பெற்ற உள்நாட்டு மோதல்களினால் ஆயிரக்கணக்கான சிறுவர்கள் அவர்களது வீடுகளில இருந்து இடம் பெயர்ந்து வெவ்வேறு இடங்களில் தங்கி வாழ்கினறார்கள்.

இதன் காரணமாக இவர்கள் பட்டினியையும் மன அழுத்தத்தையும் எதிர்கொள்ள நேரிடுகின்றது.

இலங்கையைப் பொறுத்த வரை வறுமையும், மோதல்களுமே சிறுவர்களுக்கான மிகப்பெரிய அச்சுறுத்தலாக உள்ளன. வழமையாக இவற்றில் ஒன்றுதான் சிறுவர்களைப் பாதிப்பதுண்டு. எனினும், இலங்கையில் இவை இரண்டும் சேர்ந்து சிறுவர்களைப் பாடசாலைகளிலிருந்து விலக்கி வைததுள்ளன. குடும்பங்களிலிருந்து பிரித்துள்ளன.

அத்துடன் பெருமளவு சிறுவர்கள் போசாக்கின்மைக்கும் நிலக்கண்ணிவெடியால் ஏற்படும் பாதிப்புக்களுக்கும் உள்ளாகியுள்ளனர்.

வறுமை மோதலுக்கு வழிவகுக்கின்றது. மோதல்கள் வறுமையை அதிகரிக்கின்றன. இலங்கையில் சிறுவர்களின் இவ்வாறான நிலையை மேம்படுத்த இந்த இரண்டிற்கும் எதிராக நடவடிக்கை எடுக்கவேண்டும். இந்த இரண்டினாலும் ஏற்படும் ஆபத்தைக் குறைக்க வேண்டும்.

சிறுவர்களுக்கு சர்வதேச அளவில் மிக அச்சுறுத்தலாக அமைந்திருப்பவற்றில் வறுமையும், மோதல்களும், எயிட்ஸும் முக்கியமாக உள்ளன.

தனித்தும் கூட்டாகவும் இவை சிறுவர்களின் உயிர் வாழ்தலையும், நல் வாழ்க்கையையும், எதிர்காலத்தையும் பாதிக்கின்றன.

சர்வதேச அளவில் ஒரு மில்லியனுக்கும் மேற்பட்டவர்கள் வறுமைக் கோட்டின் கீழ் வாழ்கின்றனர். மூன்றாம் உலக நாடுகளில் வாழும் சிறுவர்களில் ஐந்தில் ஒருவருக்கு சுத்தமான குடிதண்ணீர் கிடைப்பதில்லை.

உலக நாடுகளில் 2 மில்லியன் சிறுவர்கள் எயிட்ஸுடன் வாழ்கின்றனர். 15 மில்லியன் சிறுவர்களின் பெற்றோர் எயிடஸ் தாக்கத்திற்கு உள்ளாக்கப்பட்டதன் காரணமாக அனாதைகளாகியுள்ளனர்.

கடந்த 1990 ஆம் ஆண்டுகளில் யுத்தத்தினால் கொல்லப்பட்ட 3.6 மில்லியன் பொதுமக்களில் 43 வீதமானவர்கள் சிறுவர்கள். வருடநதோறும் நிலக்கண்ணிவெடிக்குப் பலியாகும் 20 ஆயிரம் பேரில் 4 ஆயிரம் பேர் சிறுவர்கள் எனக் குறிப்பிடடார். (ந-4)

# கட்சி பேதமின்றி எம்.பிக்களின் உரிமைகளை பாதுகாக்க உரிய நடவழிக்கை எடுக்கப்படும்

## சபாநாயகர் உறுதிமொழி

கடசிபேதமின்றி சகல பாராளுமன்ற உறுப்பினர்களினதும் உரிமைகளைப் பாதுகாப்பதற்கான நடவடிக்கைகள் எடுக்கபபடுமென சபாநாயகர் டபிள்யு.ஜே.எம்.லொக்குபண்டார உறுதியளித்துள்ளார்.

பாராளுமன்றில் நேற்றுமுன்தினம் உரையாற்றும்போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அவர் அங்கு மேலும் தெரிவிக்கையில்,

எதிர்க்கட்சியான ஐக்கிய தேசியக் கட்சியிலிருந்து சபாநாயகராக நான் தெரிவு செய்யப்பட்டபோதிலும், சபாநாயகராக நான் ஆற்றவேண்டிய கடமைகளை ஒழுங்காகச் செய்ய வேண்டிய கட[illegible]டு எனக்கு உண்டு. எனவே, கட்சி பேதமின்றி அனைத்துப் பாராளுமன்ற உறுப்பினர்களினதும் உரிமைகளைப் பாதுகாபபதற்கு நடவடிக்கை எடுக்கப்படும் எனக் குறிப்பிட்டார்.

பாராளுமன்றில் நேற்று முன்தினம் வரவு-செலவுத்திட்டத்தில் நான்கு அமைச்சுக்களுக்கான நிதி ஒதுக்கீடுகள் வாக்கெடுப்பின்றி நிறைவேற்றப்பட்டன.

பாராளுமன்ற நடவடிக்கைகள் இடம்பெற்றபோது இடையூறுகள் இடம்பெற்றதன் காரணமாக அமைச்சுக்களுக்கான நிதி ஒதுக்கீடுகள் வாக்கெடுப்பின்றி நிறைவேற்றப்பட்டதாக சபாநாயகர் மேலும் தெரிவித்தார். (ந-8)

# மா[illegible]ட்ட மட்ட திருக்குறள் மனனப் போட்டியின் பரிசளிப்பு விழாவும் சாதனையாளர் கௌரவிப்பும்

(யாழ்ப்பாணம்)

யாழ்.வலய கல்விப் பணிமனையினால் யாழ்.வேம்படி மகளிர் உயர்தரப் பாடசாலையில் நேற்று முன்தினம் நடாத்தப்பட்ட மாவட்ட மட்ட திருக்குறள் மனனப்போட்டியின் பரிசளிப்பு விழாவும், சாதனையாளர் கௌரவிப்பு நிகழ்வும் மிகவும் கோலாகலமாக நடைபெற்றது.

யாழ்.வலயக் கல்விப் பணிப்பாளர் ப.விக்னேஸ்வரன் தலைமையில் பி.ப. 2.00 மணிக்கு நிகழ்வு ஆரம்பமானது. யாழ்.வேம்படி மகளிா உா்யதரப் பாடசாலை மாணவிகளின் வரவேற்பு நடனத்துடன் பிரதம விருந்தினர்களை வாசலில் இருந்து விழா மண்டபத்திற்கு அழைத்துச்சென்றனர். மங்கள விளக்கை பிரதம விருந்தினராகக் கலந்துகொண்ட புரவலர் இந்திரன் காராளசிங்கம், யாழ்.வலயக் கல்விப் பணிப்பாளர் ப.விக்னேஸ்வரன், வலிகாமம் வலயக்கல்விப் பணிப்பாளர் திருமதி றெஜினா இருதயநாதன், புலவர் ம.பார்வதி நாதசிவம், வேம்படி மகளிர் உயர்தரப் பாடசாலை அதிபர் திருமதி கே.பொன்னம்பலம் மற்றும் தமிழீழக் கல்விக்கழக உறுப்பினர் அகிலன் ஆகியோர் ஏற்றிவைத்தனர்.

வரவேற்புரையை யாழ்.கல்வி வலய உதவிக் கல்விப் பணிப்பாளரும் திருக்குறள் மனனப் போட்டிக்குப் பொறுப்பானவருமான எம்.எஸ்.சிறிதயாளன் நிகழ்த்தினார்.

அவர் தனது உரையில்,

திருக்குறள் மனனப் போட்டி மிகுந்த சிரமத்தின் மத்தியிலேயே செய்து முடிக்கப்பட்டது.

சுமார் ஆயிரத்து 400பேர் இப் போட்டிக்காக விண்ணப்பித்திருந்தபோதும் ஆயிரம்பேரை மட்டுமே நாங்கள் தெரிவு செய்தோம. அதில் ஒவ்வொரு பிரிவிலிருந்தும் 3பேர் தெரிவு செய்யப்பட்டனர். 240 குறள்கள் மனனம் செய்து ஒப்பிப்பவர்களுக்கு பரிசில் வழங்கப்படும் என அறிவிக்கப்பட்டிருந்தது. ஆனால், சில மாணவர்கள் 500 குறள்வரை சரியானசொல் உச்சரிப்புடன் ஒப்பிவித்ததைக்கண்டு எமது வலயமே ஆச்சரியம் அடைந்தது.

இச் செயற்பாடுகள் நடைபெற்றுக்கொண்டிருக்கையில் ஒரு புரவலர்வந்து ஆயிரத்து 330 குறள்களையும் ஒப்புவிப்பவர்களுக்கு 25ஆயிரம் ரூபா பணப்பரிசில் வழங்குவதாக அறிவித்தார். எனினும் முழுக்குறள்களையும் எவரும் ஒப்புவிக்கவிலலை. இதனையடுத்து, அதிக குறள்களை ஒப்புவித்த மூவருக்கு மேற்படி பணத்தொகை பகிர்ந்து அளிக்கப்பட்டுள்ளது என்று தெரிவித்துள்ளார்.

இந்நிகழ்வில் தலைமையுரையை யாழ்.வலயக் கல்விப் பணிப்பாளர் ப.விக்கேஸ்வரனும், வாழ்த்துரையை யாழ். வேம்படி மகளிர் உயர்தரப் பாடசாலை அதிபர் திருமதி கே.பொன்னம்பலமும் சிறப்புரைகளை புரவலர் இந்திரன் காராளசிங்கம், திருமதி றெஜினா இருதயநாதன், அகிலன் ஆகியோரும் நிகழ்த்தினர்.

சிறப்புரைகளைத் தொடர்ந்து திருக்குறள் மனனப் போட்டியில வெற்றி பெற்றவர்களுக்குப் புரவலர் இந்திரன் காராள சிங்கம் பணப் பரிசில்களையும் சான்றிதழ்களையும் வழங்கிக் கௌரவித்தார். தொடர்ந்து, யாழ்மாவட்டத்தில் பல்வேறு சாதனை புரிந்தவர்களுக்கும் விருதுகள் வழங்கி கௌரவிக்கப்படடது.(ந-5)

## தினசரி தியானம்

### விவேகச் சிந்தனைகள்

நீங்கள் எல்லையற்ற ஆன்மா என்பதை உணருங்கள். இதுதான் செயல்முறை மதம், வேறு எதுவும் செயல்முறைக்கு ஒத்துவராதவை ஏனெனில் அவை எல்லாம் மறைந்துவிடும். அது ஒன்றுதான் மறையாது. அது அழிவற்றது. மருத்துவமனைகள இடிந்துவிடும். ரயில்பாதை அமைப்பவர்களும் அழியத்தான் செய்வார்கள். பூமியே பாளம்பாளமாக வெடித்துவிடும். சூரியர்களும் இருந்த இடம் தெரியாமல் அழிக்கப்பட்டு விடும். ஆன்மா என்றென்றும் இருக்கும்.

சுவாமி விவேகானந்தர்

# தொண்டர் ஆசிரியர்களுக்கு விரைவில் நிரந்தர நியமனம்

(கொழும்பு)

தொண்டர் ஆசிரியர்களை நிரந்தர நியமனம் ஆக்குவதற்கான சுற்று நிருபத்தை கல்வியமைச்சு மாகாண கல்வி அமைச்சுகளுக்கு அனுப்பிவைத்துள்ளது.

கஷ்ட மற்றும் அதிகஷ்டப் பிரதேசங்களில் 1-1-2004 வரை தொடர்ச்சியாக மூன்றாண்டு காலம் சேவையாற்றிய தொண்டராசிரியர்களே நிரந்தரமாக்கப் படவுள்ளனர்.

இவர்கள க.பொ.த. உயர்தரப் பரீட்சைப் பெறுபேற்றின் அடிப்படையில் உள்ளீர்க்கப்படவுள்ளதாக கல்வி அமைச்சு தெரிவித்துள்ளது. (ச-9)

## சமய அறிவுப் போட்டி

யாழ். மாநகரசபை சைவ சமய விவகாரக் குழுவினால் நடாத்தப்படும் சமய அறிவுப் போட்டி எதிர்வரும் 26 ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை காலை 9.30 மணிக்கு கொக்குவில் இந்துக் கல்லூரியில் நடைபெறவுள்ளது. (ந-51)

## மாநகரசபை...

புத் தொழிலாளர்களின் போராட்டத்திற்கு ஆதரவு தெரிவித்து ஏனைய சில அரச நிறுவனங்களின் சிற்றூழியர்களும் போராட்டத்தில் குதிக்கவுள்ளதாக தெரிவிக்கப் படுகின்றது.

(ச-19-130-51)

## வெலிக்கடைச்...

தாமர திஸநாயக்க மற்றும் மகன்மாரையும்சிறைச்சாலைக்குள் அனுமதிக்கவில்லை என தெரிவிக்கப்படுகிறது.

நீதி அமைச்சின் சட்ட நடைமுறைகளின்படி ஒருமாதத்தில் ஒருமுறை பார்வையிடலாம் என்று சிறைச்சாலை அதிகாரிகள் தெரிவித்ததை அடுத்து, பகல்10.45மணிமுதல் சுமார் 45 நிமிடங்களாகசிறைச்சாலைக்கு வெளியேகாத்திருந்தபின் எஸ்.பி. திஸநாயக்க குடும்பத்தினர் வீடு திரும்பினர்.

நேற்றுக்காலைசிறைச் சாலைக்குச் சென்ற எஸ்.பி.திஸநாயக்கவின் சட்டத்தரணிகளையும் உள்ளே விடவில்லை எனவும் தெரிவிக்கப்படுகிறது. (ச)

# மூதறிஞர் "சொக்கன்"...

பெற்று துடன்தனது15ஆவது வயதில் தினகரன் பத்திரிகையில் தனது முதலாவது சிறுகதையை எழுதினார். தமிழ் இலக்கியம், இந்துநாகரிகம் உட்பட முப்பதுக்கும் மேற்பட்டநூல்களையும், நாவல்களையும், 200 இற்கு மேற்பட்டசிறுகதைகள், நாடகங் களையும்எழுதியபெருமை இவருக்கு உண்டு.

இவருக்கு யாழ். பல்கலைக்கழகம் இலக்கிய கலாநிதி பட்டத்தையும் சட்டநாதர் பாலகதிர்காம ஆலயம் "குகஸ்ரீ" என்ற பட்டத்தையும் அகில இலங்கைக் கம்பன் கழகம் "மூதறிஞர்' என்ற பட்டத்தையும்வழங்கி கௌரவித்துள்ளன.

"சாகித்திய மண்டல" விருதை மூன்று தடவைகள் பெற்ற சொக்கன் அவர்கள் வலம்புரிப் பத்திரிகையில் "பழையவன்" என்ற பெயரில் வெண்பாக்களையும்,தனது வெளிநாட் டுப்பயணத் தொடரையும் எழுதியிருந் தார்.

நல்லூர் முருகன் ஆலயத்துடன் நெருங்கிய தொடர்பைக் கொண்டிருந்த சொக்கன் யாழ். மாநகர சபை வெளியிடும் நல்லைக் குமரன் மலரில் நல்லூர் ஆலயம் பற்றிய பல கட்டுரைகளையும் எழுதியுள்ளார்.

நாயன்மார்கட்டில் வசித்துவந்த சொக்கனின் பூதவுடல், யாழ்ப்பாணம் பருத்தித்துறைவீதி நல்லூரில் அமைந்துள்ள அவரது இல்லத் தில் அஞ்சலிக்காக வைக்கப்பட்டுள்ளது. (ந-8)

# எமது தேசத்தைக் கட்டியெழுப்பும்...

மைகள் செயலகம் ஆரம்பிக்கப்பட்டு சில காலத்திற்குள்ளேயே எமது மக்களின் பிரச்சினைகள் சர்வதேச மட்டத்திற்கு கொண்டு செல்லப்பட்டுள்ளன.

எமது விடுதலைப் போராட்டமானது ஒரு உரிமைப் போராட்டமாகும். அதன மூலம் மனித உரிமைகளை மீட்டெடுப்பதே எமது நோக்கமாகும்.

தென்னிலங்கையில் பலர் மனித உரிமைகளைப் பற்றி பேசுவதற்கு பட்டங்களும் பதவிகளும் கொடுத்து நியமிக்கப்பட்டுள்ளனர்.

ஆனால் எமது பிரதேசத்தில் கல்வியறிவாளர்கள், மதகுருமார்கள் அனைவரும ஒன்றிணைந்து இங்கு மனித உரிமைகள் செயலகத்தை அமைத்திருக்கின்றனர்.

இனிமேல்தான் எங்கள் மக்களுடைய மனித உரிமைகள் தொடர்பான விடயங்களை வெளிக் கொண்டுவரும் வகையிலும், எமது தேசகட்டுமாணத்திற்கு துணைநிற்கின்ற வகையிலும் எங்களுக்கான விழுமியங்கள் கோட்பாடுகளை தெளிவுபடுத்தி எமது தேசத்தை கட்டியெழுப்புகின்ற ஒரு பணியையும் எமது மனித உரிமைகள் செயலகம் மேற்கொண்டுவருகின்றது.இவ்வாறு மக்களின் பல்வேறு பட்டகடந்தகாலமனித உரிமைகள் நடவடிக்கைகளை வெளிக்கொணருவதற்காக செயற்படும் இந்தமனித உரிமை செயலகத்தின் செயற்பாடுகளோடு நாங்கள் அனைவரும் ஒத்துழைப்பு வழங்கி இதன் செயற்பாட்டை மேம்படுத்த வேண்டும் எனவும் விடுதலைப்புலிகளின் அரசியல்துறைப்பொறுப்பாளர் சு.ப.தமிழ்ச்செல்வன் மேலும்தெரிவித்தார். இக்கலந்துரையாடலில் தமிழீழ விடுதலைப் புலிகளின் துறைசார் பொறுப்பாளர்கள் மற்றும் அமைப்புக்களின் பிரதிநிதிகள், அரசசார்பற்ற நிறுவனப் பிரதிநிதிகள் என பலரும்நிகழ்வில் கலந்துகொண்டனர். நிகழ்வில் சட்டத்தரணி சிவபாலன்,தமிழர்ஆசியர்சங்கப் பொதுச்செயலர் மகாசிவம்,நிமலன் கார்த்திகேசு,செல்வி சிறீ. அருளானந்தம் ஆகியோருடனான கலந்துரையாடல் ஒன்றும் இடம்பெற்றது. (ச-4)


இனுவில் இந்துக்கல்லூரி பழையமாணவர் சங்கம்

நடத்தும் நீரிழிவு நோய்க்கான

**இலவசக் கருத்தரங்கு**

இந்திய நீரிழிவு சங்க மருத்துவர் O M.S அப்துல்காதர் (B.SC D.COM) அவர்களின் ஆலோசனையும் மருத்துவப் பரிசோதனைகளும்

தலைவர். திரு.க. தேவராசா
(வணிகத்துறை தலைவர் யாழ். பல்கலைக்கழகம்)

அறிமுகம் :- திரு K.R .சிவலோகநாதன் (K.R.S நிறுவனம்)
இடம் :- இணுவில் பொதுநூலகம்
காலம் :- 12.12.2004 ஞாயிறு 8.00 மணி

நீரிழிவு நோய்கள் உள்ளவர்களும் இது பற்றிய விளக்கங்களை பெற விரும்புபவர்களும் இதில் கலந்து பயன் பெறுமாறு அழைக்கின்றோம்.

குறிப்பு:- 11-12-2004 சனிக்கிழமை இரவு 7.00 மணிக்கு கோண்டாவில் ஞானவீர சனசமூக நிலையத்திலும் நடைபெறும்.

இனுவில் இந்துக்கல்லூரி
பழைய மாணவர் சங்கம்

(C.829)


# விடுதலையான தினேசுக்கு விசேட பாதுகாப்பு ஏற்பாடு

ஈராக்கில் தீவிரவாதிகளால் கடத்தப்பட்டு பின்னர் விடுதலை செய்யப்பட்ட தினேஸ்ராஜரத்தினம் தற்போது ஈராக்கில உள்ள இலங்கை தூதுவரின் பாதுகாப்பில் இருப்பதாக வெளிவிவகார அமைச்சு அறிவித்துள்ளது.

ஒரேநேரத்தில் பணயக்கைதிகளாகப் பிடிக்கப்பட்ட பங்களாதேஷ் நாட்டைச் சேர்ந்த அப்துல்லாகாதி என்பவரும் விடுதலை செய்யப்பட்டுள்ளார். இவருடன் ஈராக்கில் விடுதலை செய்யப்பட்ட ராஜரத்தினத்தை இலங்கைக்கு அழைத்து வருவதற்கான ஏற்பாடுகளை வெளிவிவகார அமைச்சு மேற்கொண்டுள்ளது.

ராஜரத்தினமும் அவருடன் விடுதலை செய்யப்பட்ட பங்களாதேஷ்சை சேர்ந்த அப்துல்லாகாதியும் தேக ஆரோக்கியத்துடன் இருப்பதாக பங்களாதேஷ் வெளிவிவகார வேலைவாய்ப்பு பணியக அமைச்சர் தெரிவித்துள்ளார். (ச-4)

## தமிழ்க்...

இச் சந்திப்பின்போது கருத்துக்கள் பரிமாறப்பட்டது.

வடக்கு முஸ்லிம்களின் பிரதிநிதிகள்சார்பில் வன்னிமாவட்ட புனர்வாழ்வு அபிவிருத்தியமைச்சர் இசார் பதியுதீன் தலைமையிலான குழுவினரும் தமிழ்க்கூட்டமைப்பின் சார்பில் பாராளுமன்ற உறுப்பினர்களான மாவை சேனாதிராஜா, சுரேஷ் பிரேமச்சந்திரன், எஸ்.கஜேந்திரன், கஜேந்திரகுமார் பொன்னம்பலம், சிவநேசன், ஈழவேந்தன், பத்மினி சிதம்பரநாதன், செல்வம் அடைக்கலநாதன், விநோதரலிங்கம்,சிவசக்தி ஆனந்தன் ,கனகரத்தினம், ஜெயாநந்தமூர்த்தி, பத்மநாதன்,தங்கேஸ்வரி ஆகியோரும்கலந்துகொண்டனர்.. (ச-15)

# உலகத் தமிழ் அமைப்பின் வருடாந்த மாநாடு இன்று

அமெரிக்காவில் இயங்கி வரும் உலகத் தமிழ் அமைப்பின் வருடாந்த மாநாடு இன்று நியூஜெர்சியில் நடைபெறவுள்ளது.

இம்மாநாட்டில் கலந்துகொள்வதற்காக தமிழ்நாடு மற்றும் தமிழீழ அறிஞர்கள் பங்குபற்றவுள்ளனர்.

இந்தியத் துணைக்கண்டப் பாதுகாப்பு நிலைமைகள் மற்றும் உலக அழுத்தங்கள் தொடர்பாக இம்மாநாட்டில் சிறப்புரை நிகழ்த்தப்பட உள்ளதும் இம்மாநாட்டில் பிராந்திய மற்றும் சர்வதேச நாடுகள் இந்து மகா சமுத்திரப் பாதுகாப்பு தொடர்பாக காட்டிவரும் ஆர்வம்குறித்து இராணுவ ஆய்வாளர் டி.சிவராம் சிறப்புரையாற்றவுள்ளார்.

இம் மாநாட்டில் பல அறிஞர்கள் தமது பிரதேசத்தை உலக நாடுகளுடன் ஒப்பிட்டு கருத்துரைகளை வழங்கவுள்ளனர். (ச-8)

# எச்.என்.டி.எம் மாணவர்களுக்கு

உயர் தேசிய முகாமைத்துவ டிப்ளோமா பயிற்சி நெறியை கற்று சித்தியடைந்த மாணவர்களுக்கும் நான்காம் வருட பரீட்சை எழுதிய மாணவர்களுக்கும் என்.ஐ.ரி.எ நிறுவனத்தால் பயிற்சியளிக்கப்படவுள்ளது.

இது தொடர்பான கலந்துரையாடல் ஒன்று எதிர்வரும் 17ந் திகதி காலை 9.30 மணிக்கு யாழ்.உயர் தொழிநுட்ப நிறுவனத்தில் நடைபெறவுள்ளது.

இக் கலந்துரையாடலில் அனைத்து மாணவர்களையும் தவறாது கலந்து கொள்ளுமாறு நிறுவன இயக்குநர் ரி.இராஜரட்ணம் அறிவித்துள்ளார். (ச)

# பாராளுமன்றத்தில் நேற்று ...

ஆயினும் தமக்கு மேலும் 5 நிமிடங்கள் தேவை என்று பாராளுமன்ற உறுப்பினர் பந்துல குணவர்த்தன கோரிக்கை விடுத்தார்.

இதற்கு சபாநாயகர் ஆசனத்தில் அமர்ந்திருந்த பிரதிக் குழுக்களின் தலைவர் சச்சிதானந்தன் வாய்ப்பு வழங்காமையினால் பாராளுமன்ற உறுப்பினர் பந்துல குணவர்த்தன சபாநாயகர் ஆசனத்திற்கு சென்று எதிர்ப்பை தெரிவித்துள்ளார்.

இதனை அடுத்து பிரதிக் குழுக்களின் தலைவர் எம். சச்சிதானந்தன் சபையை தற்காலிகமாக ஒத்திவைத்தார்.

சபைமீண்டும் சபாநாயகர் டபிள்யு. ஜே.எம்.லொக்குபண்டார தலைமையில்கூடியது.

அப்போது உரையாற்றிய நிதியமைச்சர் சரத் அமுனுகம பாராளுமன்ற உறுப்பினர் பந்துல குணவர்த்தனவிற்கு உரையாற்ற கால அவகாசம் தேவையெனில் தமது நேரத்தை வழங்கத் தயார் என்று கூறினார்.

இதற்கு நன்றி தெரிவித்து பேசிய எதிர்க்கட்சியின் பிரதான அமைப்பாளர் மகிந்த சமரசிங்க அவ்வாறான தேவை இல்லை என்றும் பாராளுமன்ற உறுப்பினர் பந்துல குணவர்த்தனவிற்கு நேரம் தேவையாக இருந்தால் அவருக்கு எதிர்கட்சிவழங்கும் என்றும்கூறினார். (ச)











**தரம் 1 முதல் O/L வரை**

புதிய கல்வியாண்டுக்கான வகுப்புகள் ஆரம்பமாகிவிட்டன .

அனுமதிகள் 31-12-2004 வரை வழங்கப்படும்

**தரம் 5 புலமைப்பரிசில் -2005**

விசேட புலமைப்பரிசில் வகுப்பும் ஞாயிறு தோறும் நடைபெறும் மாதிரிப்பரீட்சையும் நடைபெறுகின்றன.

நாவலர் இன்ஸ்ரிரியூட்

ஆனைப்பந்தி, யாழ்.நகர்.

(C.830)


இப் பத்திரிகை வலம்புரி அன்.கோ ஸ்தாபனத்தாரால் இல.15 வெள்ளாங்கொடி, யாழ்ப்பாணம் என்னும் முகவரியிலுள்ள அவர்களது அச்சகத்தில் 11.12.2004 இல் அச்சிட்டு வெளியிடப்பட்டது.